بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1
வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை
# பதர்
காதியான்
The Weekly
BADAR Qadian
TAMIL

இதழ் 10
ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது
துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

4 ஷஅபான் 1437 ஹிஜ்ரி கமரி 12 மே 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

எனது எதிரிகள் இந்த அளவு தொடர்ச்சியாக தோல்வியுற்ற பிறகும் என்னைப் பற்றி ஏதாவதொரு நேரத்தில் இந்த நபருடன் அவருக்குப் பின்னால் ஒரு கை இருக்கின்றது. அது அவர்களின் ஒவ்வொரு தாக்குதலிலிருந்தும் அவரை காப்பாற்றுகின்றது என்பதை உணர முடியாமல் இருப்பது வேதனைக்குரியதாகும். துர்பாக்கியமாக இல்லாமல் இருந்தால் இது அவர்களுக்கு ஓர் அற்புதமாக இருந்தது. அதாவது, அவர்கள் தாக்குதல் நடத்திய ஒவ்வொரு நேரத்திலும் இறைவன் என்னை அவர்களின் தீங்கிலிருந்து காப்பாற்றினான். காப்பாற்றியதோடு மட்டுமல்லாமல் அவன் காப்பாற்றுவான் என்று முன்னதாகவே அவன் எனக்கு தெரிவித்து விட்டான்.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இறைவனின் தூதரை ஏற்றுக் கொள்வது ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்வதற்குக் காரணமாக இருக்கின்ற கடமையைப் போன்றதாகும். இவற்றிற்கிடையே ஒன்றுக்கொன்று எத்தகைய தொடர்புகள் இருக்கின்றனவென்றால் அவற்றில் ஒன்று மற்றொன்றிலிருந்து பிரியவே முடியாது. தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. அதில் ஒளி இல்லை. ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக் -கின்றது. அவர் குருடராவார். தவ்ஹீது என்றால் என்ன? என்று அவருக்கு எதுவும் தெரியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்தத்(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். அவர்கள் இஸ்லாத்தின் உண்மைக்குப் பகைவர்களாவர். மார்க்கத்தைத் துறந்து செல்வதற்கான ஒரு வழியை அவர்கள் தமக்காக ஏற்படுத்திக் கொண்டனர். அவர்களுக்கு உதவி செய்வது மார்க்கப் பற்றுள்ள ஒருவரின் வேலையல்ல. நமது எதிரிகள் தம்மை மவ்லவி என்றும், அறிவாளி என்றும் கூறிக் கொண்ட பிறகும் கூட இந்த மக்களின் இத்தகைய செயல்களால் மகிழ்ச்சியடைகின்றனர் என்பது வேதனைக்கு உரியதாகும். உண்மையில் எனக்கு இழிவும் அவமானமும் ஏற்படும் வகையில் ஏதாவதொரு காரணம் உருவாகி விட வேண்டும் என்பதையே இந்த அப்பாவிகள் எப்போதும் தேடிக்கொண்டிருக் -கின்றனர். ஆனால், தமது துர்பாக்கிய நிலையின் காரணமாக அவர்கள் இறுதியில் தோல்வியையே தழுவுகின்றனர். முதலில் இம்மக்கள் எனக்கு எதிராக குஃப்ர் ஃபத்வாக்களை (என்னை காஃபிர் என்று கூறும் மார்க்கத் தீர்ப்புகளை) ஆயத்தம் செய்தனர். ஏறக்குறைய இருநூறு மவ்லவிகள் அதன் மீது முத்திரையைப் பதித்தனர். அவர்கள் நம்மைக் காஃபிர்களாக்கி விட்டனர். இந்த ஃபத்வாக்களில் எந்த அளவு கடினமாக இவர்கள் எழுதியுள்ளனர் என்றால், இந்த மக்கள் மறுப்பதில் யூதர்கள் மற்றும் கிறித்தவர்களை விடவும் மோசமானவர்களாவர் என்றும் கூட சில ஆலிம்கள் எழுதியுள்ளனர். இம்மக்களை முஸ்லிம்களின் கபருஸ்தானில் அடக்கம் செய்யக் கூடாது. இவர்களுக்கு ஸலாம் கூறக் கூடாது. இவர்களுடன் கை குலுக்க கூடாது. இவர்கள் காஃபிர்களாக ஆகி விட்டதால் இவர்களுக்குப் பின்னால் தொழுவது சரியல்ல என்றும் பொதுவாக மார்க்கத் தீர்ப்பு கூறியுள்ளனர்.

இன்னும் சொல்வதென்றால், இம்மக்களை பள்ளிவாயில்களில் நுழைய விடக் கூடாது. ஏனென்றால், இவர்கள் காஃபிர்கள் ஆவர். அவர்கள் வருவதால் பள்ளிவாயில்கள் அசுத்தமாக ஆகி விடுகின்றது. அவர்கள் அவற்றில் நுழைந்து விட்டால் பள்ளிவாயிலைக் கழுவி விட வேண்டும். அவர்களின் செல்வங்களைத் திருடுவது சரியானதாகும். இம்மக்கள் கொலை செய்யப்பட வேண்டியவர்கள் ஆவர். ஏனென்றால், இவர்கள் இரத்த வெறியுள்ள ஒரு மஹ்தியை மறுப்பவர் -களாகவும் ஜிஹாதை மறுப்பவர்களாகவும் இருக்கின்றனர். இந்த ஃபத்வாக்கள் கொடுக்கப்பட்ட பிறகும் கூட அதனால் எங்களுக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டது? இந்த ஃபத்வா நாட்டில் வெளியிடப்பட்ட அந்த நாட்களில் பத்து பேர்கள் கூட என்னிடம் பைஅத் செய்திருக்கவில்லை. ஆனால், இன்று இறைவனின் அருளால் மூன்று இலட்சத்திற்கும் அதிகமானோர் இந்த ஜமாஅத்தில் இருக்கின்றனர். உண்மையை நாடுபவர்கள் மிகவும் வேகமாக இந்த ஜமாஅத்தில் இணைந்து கொண்டிருக் -கின்றனர். நம்பிக்கை கொண்டவர்களுக்கு எதிரில் மறுப்பவர்களுக்கு இறைவன் இவ்வாறுதான் உதவி செய்வானா என்ன? பிறகு நாங்கள் இருபது கோடி முஸ்லிம்களையும், கலிமா சொல்பவர்களையும் காஃபிர்கள் என்று கூறியதாகவும் நம் மீது குற்றம் சாட்டி, இவர்கள் கூறுகின்ற பொய்யைப் பாருங்கள். ஆனால், அவர்களை காஃபிர் என்று கூறுவதற்கு ஒருபோதும் நாங்கள் முந்திக் கொள்ளவில்லை. இவர்களின் ஆலிம்கள்தான் நமக்கு எதிராக குஃப்ர் ஃபத்வாக்களை எழுதினர். இம்மக்கள் காஃபிர்கள் ஆவர் என்று முழு பஞ்சாபிலும் இந்தியாவிலும் அவர்கள் கூச்சலிட்டனர். அறிவற்ற மக்கள் இந்த ஃபத்வாக்களினால் நம்மிடம் எந்த அளவு வெறுப்படைந்தனர் என்றால் ஒருவர் நம்முடன் நேருக்கு நேர் தம் முகத்தைப் பார்த்து மென்மையாக எதையாவது பேசுவதும் கூட அவர்களது பார்வையில் பாவமாக ஆகி விட்டது. ஏதாவது ஒரு மவ்லவி அல்லது எதிரி அல்லது சான்றோர்களின் வழித்தோன்றல்களில் வந்த ஒருவர் முதலில் நாங்கள்தான் அவர்களை காஃபிர் என்று கூறினோம் என்பதற்கான ஆதாரத்தை தர முடியுமா? அத்தகைய ஏதாவதொரு தாள் அல்லது பிரசுரம் அல்லது சிறு நூல் நம் தரப்பிலிருந்தும் இம்மக்களின் குஃப்ர் ஃபத்வாவிற்கு முன்னதாக வெளியிடப்பட்டிருந்தால் அதற்கான ஆதாரத்தைத் தாருங்கள். அவ்வாறு தர முடியாத பட்சத்தில் நீங்கள் எங்களைக் காஃபிராக்கி விட்டு பிறகு நாங்கள் எல்லா முஸ்லிம்களையும் காஃபிர்கள் என்று கூறுகின்றோம் என்று எங்கள் மீது குற்றம் சாட்டுவது எந்த அளவு நேர்மையற்ற செயல் என்பதை அவர்களே சிந்திக்கட்டும். இந்த அளவு நேர்மையற்ற, பொய்யாக, நடந்ததற்கு மாற்றமான பழியைச் சுமத்துவது எந்த அளவு உள்ளத்தை புண்படுத்தக்கூடிய செயலாக இருக்கின்றது. ஒவ்வோர் அறிவுள்ள மனிதராலும் இதை சிந்திக்க முடியும். தங்களது ஃபத்வாக்கள் மூலம் இவர்கள் நம்மை காஃபிராக்கிய பிறகு ஒரு முஸ்லிமை காஃபிர் என்று கூறுபவர் பக்கமே அந்த குஃப்ர் (மறுத்தல்) திரும்பி விடுகின்றது என்பதை இவர்களே ஏற்றுக் கொண்ட பிறகு, இந்நிலையில் அவர்கள் ஏற்றுக் கொண்டதற்கேற்ப அவர்களை காஃபிர் என்று கூறவதற்கான உரிமை நமக்கு இல்லையா?

சுருக்கமாக, இம்மக்கள் காஃபிர் என்று கூறுவதன் மூலமாக சில நாட்கள் வரை இந்த

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

நாம் நமது வாழ்வில் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் அனுமதித்த வேலைகளையே செய்ய வேண்டும். என்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு கனவு குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுடைய மார்க்கத் தீர்ப்பு மற்றும் சுன்னத்திற்கு எதிராக இருப்பின் எந்நிலையிலும் அது மறுக்கப்படத்தக்கதாகக் கருதப்படும்.

இறை தூதர்களின் ஜமாஅத் நோயாளிகளை விட்டு தனித்திருக்கா விட்டால் அந்நோயால் பாதிக்கப்பட்டு விடுவர். இதுபோன்றே அல்லாஹ்வுடைய சுன்னத்தாவது ஆன்மீக நோயாளிகளை விட்டு தூய மக்களின் ஜமாஅத்தை பிரித்து வைக்க வேண்டியது இருந்தது. எனவே அல்லாஹ்வுடைய கட்டளையாவது, ஜனாஸா, திருமணம், தொழுகை போன்றவற்றில் அவர்கள் தனித்திருக்க வேண்டும் என்பதாகும்.

உங்கள் உலகியல் விருப்பத்தின் மீது, உங்கள் வருங்கால சந்ததிகள் மற்றும் மார்க்கத்திற்கு முன்னுரிமை தாருங்கள். அது அல்லாமல் பெண்கள் அந்நியருடன் செல்வதால் மட்டும் அழிவதில்லை. மாறாக, பையன்களக்கு வெளியிலிருந்து பெண் எடுப்பதாலும் அழிவே ஏற்படுகிறது. ஒவ்வோர் அஹ்மதியும் இதனைப் புரிய வேண்டும். அஹ்மதி, சமூக அழுத்தங்கள் மட்டும் உறவுகளால் மட்டும் அஹ்மதியாக இருக்கக் கூடாது. மாறாக, மார்க்கத்தைப் புரிந்து அஹ்மதியாவதற்கு முயற்சி செய்யுங்கள். அஹ்மதி பையன்கள் வெளியே பெண் எடுத்தார்கள் என்றால், பிறகு அஹ்மதி பெண்கள் எங்கு திருமணம் செய்வார்கள்? எனவே, பையன்களும் சிந்திக்க வேண்டும்.

அஹ்மதி பையன்கள், பெண்கள் திருமணம் செய்ய விரும்பினால் பெற்றோர் பிடிவாதம் பிடிக்கக் கூடாது. குடும்பம் கோத்திரம் என்ற அகந்தையில் சிக்கிவிடக் கூடாது.

பெண்களுக்கு விரும்பிய இடத்தில் திருமணம் செய்து வைக்க வேண்டும். அவர்களின் விருப்பத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள். திருமணத்தில் அவர்களின் விருப்பமும் அடங்கும். அவ்வாறிருந்தும், இஸ்லாம் இன்னொரு விஷயத்தையும் நிச்சயமாக பேணுமாறு கூறுகிறது. அதாவது, வலி -யின் விருப்பமின்றி நிகாஹ் அனுமதிக்கப்பட்டதல்ல.

இஸ்லாம் இவ்வாறு கூறுகிறது. நீங்கள் திருமணம் செய்வதாயின், உருவமைப்பை பார்த்துக் கொள்ளுங்கள். உருவமைப்பைப் பார்ப்பதும் சிரமம் எனில் அக்காலத்தில் புகைப்படத்தைப் பார்க்க முடிந்தது. இப்போதும் பார்க்க முடியும்.

மதிப்பிற்குரிய மர்ஹூம் முஹம்மது ஷரீஃப் சாஹிப் அவர்களின் மனைவியான ஸகீனா நாஹித் சாஹிபா அவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். மதிப்பிற்குரிய காஸி அப்துல் கனி சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய காஸி அப்துல் கனி சாஹிப் அவர்கள் தமது நாட்டிற்காக உயிரை அர்ப்பணித்து ஷஹீதாக்கி விட்டார்கள். பாகிஸ்தான் இராணுவத்தில் சிப்பாயாக தீவிரவாதத்திற்கு எதிரான ஆபரேஷனில் இவர் பங்கு பெற்றிருந்தார். மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 8 ஏப்ரல் 2016 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 –ஆம் ஆண்டு ஷஹாதத் மாதம் 8 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

ஒருமுறை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: “நமது பணிகள், நமது செயல்கள், நமது முடிவுகள் ஆகியவை திருக்குர்ஆன் ஹதீஸிற்கேற்ப இருக்கின்றனவா? இல்லையா? என்று நாம் ஆய்வு செய்ய வேண்டும். அதுபோன்று ஏதாவது ஒரு விவகாரத்தில் திருக்குர்ஆன் ஹதீஸிலிருந்து விளக்கம் கிடைக்காத போது அதற்கு எவ்வாறு முடிவு காண்பது என்று மனிதன் சிந்திக்கிறான். முன்னர் வாழ்ந்த பெரியவர்களின் கூற்றுகள் மற்றும் தீர்ப்புகளைக் கடைபிடிக்க வேண்டும்.”

இது தொடர்பாக அன்னார் கூறினார்கள்: “ஒருமுறை நாம் நமது விவகாரங்களில் எவ்வாறு முடிவு எடுக்க வேண்டும்? எதிலிருந்து வழிகாட்டலைப் பெற வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அன்னார் இந்தப் பதிலையே கூறினார்கள். நமது வழியாவது எல்லாவற்றிற்கும் முதலில் திருக்குர்ஆனுக்கு ஏற்ப முடிவு எடுக்க வேண்டும். திருக்குர்ஆனில் ஒரு விஷயம் கிடைக்காத போது அதனை ஹதீஸில் தேட வேண்டும். ஹதீஸிலும் அவ்விஷயம் கிடைக்காத போது உம்மத்தில் செய்யப்பட்ட தீர்ப்புகள், தரப்பட்ட ஆதாரங்கள்ஆகியவற்றிற்கு ஏற்ப தீர்வு காண வேண்டும்.”

இங்கு இன்னொன்றும் தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறும் கூறினார்கள்: “சுன்னத் (ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நடைமுறை) ஹதீஸை விட மேலானதாகும். ஒரு விஷயம் சுன்னத்திலிருந்து நிரூபிக்கப்பட்டு விட்டால் எந்நிலையிலும் அதனை செயல்படுத்த வேண்டும். அதற்கு அடுத்த படியான இடத்தைத்தான் ஹதீஸ் பெறுகிறது. சுன்னத் என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் செய்து காட்டி, அதனை ஸஹாபாக்கள் கற்றும், பிறகு அதனை ஸஹாபாவிடமிருந்து தாபியீன் மற்றும் தபஅத் தாபியீன் கற்றும், அதிலிருந்து உம்மத்தில் நடைமுறைப் –படுத்தப்பட்டதும் ஆகும்.”

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்தக் கருத்தை இவ்வாறு விளக்குகிறார்கள்: நாம் நமது வாழ்வில் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் அனுமதித்த வேலைகளையே செய்ய வேண்டும் என்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். சிலருக்கு சில நேரங்களில் நன்மை தலையில் ஏறி விடுகிறது. அவர்கள் அதனை மிகைப்படுத்தி தமது உயிரையும் துன்பத்தில் ஆழ்த்திக் கொள்கின்றனர் அல்லது தம் மீதே அநீதியிழைத்துக் கொள்கின்றனர். சிலர் அல்லது பெரும்பாலார் அத்தகையவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் கட்டளைகளை மேலோட்டமாக எடுத்துக் கொள்கின்றனர். அதனை எந்த அளவுக்கு செயல்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு அதனை செயல்படுத்துவதில் கவனம் செலுத்துவதில்லை. எனவே, இந்த இரு வகையான மக்களும் கூடுதல் அல்லது குறைவை தமது பணிகளில் மேற்கொள்கின்றனர். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் கட்டளையிலிருந்து வெளியில் வந்து விடுகிறார்கள். நன்மையில் முன்னேறுபவர்களுக்கு சில உதாரணங்கள் இருக்கின்றன. ஒரு பெண்ணின் உதாரணத்தை அன்னார் தந்துள்ளார்கள். அப்பெண் அனுமதியற்ற முறையில் நன்மையின் பெயரால் ஒரு செயலைச் செய்ய விரும்பினாள். அது உண்மையில் நன்மையல்ல. ஏனென்றால், அல்லாஹ்வும் அவனது தூதரும் அதற்கு அனுமதி தந்ததில்லை. அந்த சம்பவத்தை நான் விளக்குகிறேன். சிலர் சில நேரங்களில் தமது கனவுக்கு பெரும் முக்கியத்துவம் தருகின்றனர். அத்தகையோருக்கு இதில் பெரும் படிப்பினை இருக்கிறது. அதே வேளையில் அவர்களின் ஒவ்வொரு கனவும் உண்மையானது என்று கூறத்தக்க அந்தஸ்தைப் பெற்றதாக இருப்பதில்லை; அதற்கு ஓர் அர்த்தமும் இருப்பதில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: “இன்று நம்மிடம் ஒரு பெண் வந்தார். அவர் காதியானின் பழைய ஒரு பெண்ணாக இருந்தார். அவரது மூளையில் ஏதோ குறைபாடு இருந்தது. அப்பெண் கூறினார். நான் கனவு கண்டேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அங்கு வருகை தந்துள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நீ தொடர்ந்து ஆறு மாதம்

நோன்பு வைத்தால் கலீஃபத்துல் மஸீஹிற்கு உடல் நலம் கிடைத்து விடும்.'' இது முஸ்லிஹ் மவ்வூது சுகமில்லாமல் இருந்த போது நடந்த சம்பவமாகும்.

அப்பெண் கூறினார்: ''ஆனால் நான் எந்த மார்க்க அறிஞர்களிடம் கேட்டாலும் ஆறு மாதம் தொடர்ந்து நோன்பு வைப்பது அனுமதிக்கப்பட்டதல்ல என்றே கூறுகின்றனர். மியான் பஷீர் அஹ்மது சாஹிப், நீ வியாழன் மற்றும் திங்கள்கிழமைகளில் நோன்பு வை என்று கூறினார்கள். ஆனால் அதற்குப் பிறகும் நான் கனவில் பார்த்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். அன்னார் என்னிடம் கூறினார்கள்: நான் உன்னிடம் ஆறு மாதம் தொடர்ந்து நோன்பு வைக்குமாறு கூறினேனே? நீ ஏன் வைக்கவில்லை என்று கேட்டார்கள்.''

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''நான் அப்பெண்ணிடம் கூறினேன். உனது கனவு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இல்ஹாமை விடவும் பெரியதாக இருக்க முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூட தனது இல்ஹாம்கள் குறித்து கூறுகிறார்கள். எனது ஓர் இல்ஹாம் குர்ஆன் ஹதீஸிற்கு எதிராக இருக்கும் எனில் அதனை சளியைப் போன்று வெளியே எடுத்து எறிந்து விடுவேன் என்று கூறியுள்ளார்கள்.'' (தொண்டையிலிருந்து சுத்தமாக்கி வெளியே தூக்கி எறிந்து விடுவேன்.) ''ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது வஹியை குர்ஆன் மற்றும் சுன்னத்திற்கு இவ்வளவு இணக்கமாக ஆக்குகிறார்கள் என்றால், நமது கனவை திருக்குர்ஆன் ஹதீஸிற்கேற்பவே புரிய வேண்டும். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுடைய ஹதீஸிலிருந்து நிரூபிக்கப்பட்டது என்னவென்றால், அன்னார் உம்மத்தில் உள்ளவர்களை தொடர்ச்சியாக நீண்ட காலம் நோன்பு வைப்பதை தடுத்துள்ளார்கள். உங்களுக்கு அன்னாரின் சுன்னத்திற்கு எதிராக கனவு வந்தால் அது ஷய்த்தானிய கனவாகவே கருதப்படும். சந்தேகமின்றி நீங்கள் கண்டதில் அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதாக இருந்த போதிலும் அது இறைவனிடமிருந்து வந்ததாக கருதப்படாது.'' சந்தேகமின்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் என்று நீ கூறுகின்றாய். அது இறைவனிடம் இருந்து வந்த கனவாக இருந்தால் அது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதை உண்மைப்படுத்தியிருக்கும்; அவர்கள் கூறியதை மறுக்கக் கூடியதாக இருக்காது. ஒரு கனவு குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுடைய மார்க்கத் தீர்ப்பு மற்றும் சுன்னத்திற்கு எதிராக இருப்பின் எந்நிலையிலும் அது மறுக்கப்படத்தக்கதாகக் கருதப்படும். ஏனெனில் திருக்குர்ஆனுக்கு எதிராக ஒரு கனவு உண்மையானதாக இருக்க முடியாது. அல்லது சுன்னத்திற்கு எதிராக ஒரு கனவு உண்மையாக இருக்க முடியாது. அல்லது நம்பத்தகுந்த ஹதீஸிற்கு எதிராக ஒரு கனவு உண்மையானதாக இருக்க முடியாது.'' (அல் ∴பஸ்ல் 25 நவம்பர் 1958, தொகுதி 47/12 பக்கம் 3, எண்.272) எனவே, கனவுகளை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு காரியத்தையும் அது நல்ல காரியமாகவே இருப்பினும், அதை செய்வதற்கு உங்களை சக்திக்கு மீறிய கஷ்டத்தில் இட்டுக் கொள்வது தவறாகும். இன்னும் கூறுவதென்றால் அது நற்செயலுக்கு மாற்றமானதுமாகும். சில வேளை அது பாவமாகவும் ஆகி விடுகிறது. ஆயினும், ஒருவரை அல்லாஹ் தன் புறமிருந்து நியமிக்கப்பட்டவராக நிறுத்த நினைக்கிறான் எனில் அவருடன் அவனது நடைமுறை முற்றிலும் வேறுபட்டதாகவே இருக்கிறது. சாதாரண மக்களுடன் அவன் அவ்வாறு நடந்து கொள்வதில்லை. அவர்களை சாதாரண மனிதருடன் ஒப்பிட முடியாது.

இந்த சம்பவத்திலிருந்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆறு மாதம் நோன்பு வைத்தார்களே என்று யாருக்கேனும் ஓர் எண்ணம் தோன்றலாம். அது தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டிய விஷயமாவது, அன்னாரை இறைவன் நுபுவ்வத்தின் அந்தஸ்தில் நிலை நிறுத்த வேண்டியதிருந்தது. இரண்டாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தாமே இவ்விஷயத்தில் என்ன கூறியிருக்கிறார்கள்? இவ்விஷயம் தொடர்பாக நமக்கு என்ன போதனை செய்துள்ளார்கள் என்பதை எடுத்து வைக்கிறேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: ''ஒருமுறை தற்செயலாக ஒரு வயதான பெரியவர், தூய தோற்றமுடையவர் எனக்கு கனவில் காட்டப்பட்டார். அவர் இதனை குறிப்பிட்டு விட்டு இவ்வாறு நோன்பு நோற்பது வானத்தின் ஒளிகளைப் பெறுவதற்காக நபிமார்களின் குடும்பத்தின் சுன்னத்தாக விளங்குகிறது. இவ்வாறு நான் நபி (ஸல்) அவர்களுடைய குடும்பத்தின் இந்த சுன்னத்தைப் பின்பற்றுமாறு அவர் எனக்கு சுட்டிக் காட்டினார். எனவே, நான் சில காலம் வரை இவ்வாறு தொடர்ந்து நோன்பு வைப்பது சரியனாதாக இருக்கும் என்று கருதினேன். இந்த நோன்பினால் வியக்கத்தக்க ஆன்மீகக் காட்சிகளைப் பெறும் அனுபவம் பெற்றேன். அது அக்காலத்தில் என் மீது திறந்து தரப்பட்டது. அதற்குப் பிறகு இறைவன் என்மீது ஆன்மீகக் காட்சிகளின் ஒரு தொடரை என் மீது தொடரச் செய்தான்.''

பிறகு அன்னார் என்னென்ன நடந்தது என்று அதனை விவரித்தார்கள்: ''சுருக்கமாக, இவ்வளவு காலம் தொடர்ச்சியாக நோன்பு வைத்ததில் பல வியக்கத்தக்க நிகழ்வுகள் என்னிடம் வெளிப்பட்டன. அவை பல்வேறு நுட்பமான ஆன்மீகக் காட்சிகளாக இருந்தன.'' அடுத்து வருவது நினைவில் கொள்ளத் –தக்கதாகும். ''ஒவ்வொருவரும் அவ்வாறு செய்வதற்கு இதிலிருந்து அனுமதி கிடையாது. நானும் எனது விருப்பத்தின்படி அவ்வாறு செய்யவில்லை. நினைவில் கொள்ளுங்கள். நான் நம்பத்தகுந்த ஆன்மீகக் காட்சி மூலம் இறைவனிடமிருந்து தெளிவான இறை அறிவிப்பைப் பெற்று அதன் அடிப்படையில் உடல் அளவிலான கடுமையான முயற்சிகளை மேற்கொண்டேன். எட்டு அல்லது ஒன்பது மாதங்கள் வரை முயற்சிகள் மேற்கொண்டேன். பசி தாகத்தின் சுவையை நுகர்ந்தேன். பிறகு இம்முறையை தொடர்ந்து மேற்கொள்வதை விட்டு விட்டேன்.''

ஆக, அன்னாருக்கு இறைவன் ஓர் அந்தஸ்தை தரவிருந்தான். அதனால் அவர்களுக்கு இதற்கு அனுமதி கிடைத்தது. அதன் பிறகு அன்னார் அதனை மேற்கொள்வதில்லை. அவ்வப்போது நோன்பு வைத்தார்கள். மற்றவர்களையும் தம்மை ஏற்றுக் கொண்டவர்களையும் அவ்வாறு செய்வதிலிருந்து தடுத்து விட்டார்கள்.

பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்து ஒரு ஜமாஅத்தை உருவாக்கி குழப்பத்தை ஏற்படுத்தி விட்டார்கள் என்று அன்னார் மீது பழிசுமத்தப்படுகிறது. முஸ்லிம்களின் கூற்றின்படி அன்னார் 73 –வது பிரிவை உருவாக்கி விட்டார்கள். பிரிவுகளை குறைக்க வேண்டிய தேவை இருந்தது. அவர்களோ அதற்கு மாற்றமாக மேலும் ஒரு பிரிவை உருவாக்கி மேலும் பிரிவினையை ஏற்படுத்தி விட்டார்கள். இதில் நினைவில் கொள்ள வேண்டும். இதுபோன்ற கருத்துக்கள் நபிமார்கள் தோன்றும்போது கூறப்படுகின்றன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இதே பழியை மக்கத்துவாசிகள் சுமத்தினர். இவர் சகோதரர்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தி விட்டார்; பிளவை ஏற்படுத்தி விட்டார்; பகைமையை ஏற்படுத்தி விட்டார் என்று கூறினர். ஆனால் அதற்கு முன்பே குழப்பத்தின் நிலை இருந்தது. இதுவே, இன்றைய முஸ்லிம்களின் நிலையும் ஆகும். இதுவரை அந்த நிலையே இருக்கிறது. குழப்பத்தின் நிலை அவர்களிடம் இருக்கிறது.

நபிமார்களை குழப்பத்தின் நிலையை அகற்றுவதற்காகவே அல்லாஹ் அனுப்புகிறான். ஒரு கையில் ஒன்று கூடி ஒருமைப்பாட்டை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். எனவே, நம்பிக்கை கொண்டவர்கள் பாதுகாப்பில் வருகின்றனர். ஒருமைப்பாட்டை உருவாக்கி விடுகின்றனர். குழப்பங்களை விட்டும் தூர விலகி இருக்கின்றனர். மற்ற எதிரிகள் குழப்பத்தில் ஆழ்ந்து விடுகின்றனர். நமக்கு எதிராக எதிரிகள் எவ்வளவு வேண்டுமோ ஒன்று சேர்ந்து எதிர்ப்பு தெரிவிக்கட்டும். பிறகும் அவர்கள் பிளவு பட்டுக் கொண்டே இருக்கின்றனர். இவர்களின் உள்ளம் பிளவு பட்டே கிடக்கின்றது. அவர்களின் உள்ளங்கள் துண்டு துண்டாக உடைந்துள்ளன. அவர்கள் கட்டுக்கோப்பாக இல்லை. அவ்வப்போது ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். எவ்வாறிருப்பினும் இவர்கள் இமாமை ஒப்புக் கொள்ளாத வரை இவ்வாறே நடந்து கொண்டிருக்கும். இவர்கள் நம்மை முஸ்லிம் என்று கூறினாலும் சரி, முஸ்லிம் அல்லாதவர் என்று கூறினாலும் சரி, என்ன பெயர் வேண்டுமானாலும் அவர்கள் விருப்பப்படி சொல்லட்டும். நாம் அல்லாஹ் தந்துள்ள வரையறையின்படியும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தந்துள்ள வரையறையின்படியும் உண்மையான முஸ்லிம்கள் ஆவோம். இந்தப் பெயரைக் கூறுவதிலிருந்தும் நம்மை எவரும் தடுக்க முடியாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்தக் குழப்பத்தைக் கோடிட்டுக் காட்டியவாறு இவ்வாறு கூறினார்கள்: ''ஒரு நண்பர் கூறினார். ஒருமுறை ஒரு அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சார்ந்தவர் ஹனஃபிகளின் பள்ளிவாயிலில் அவர்களுடன் ஜமாஅத்தாகத் தொழுது கொண்டிருந்தார். அத்தஹிய்யாத்தில் ஷஹாதத் கூறும் போது விரலை உயர்த்தினார். இவர் விரலை உயர்த்தியதும் உடனிருந்த தொழுகையாளிகள் தமது தொழுகையை முறித்து விட்டு அவரைத் தாக்கினர். ஹராமி ஹராமி என்று கூறத் தொடங்கினர்.'' ஹனஃபிகளின் கோட்பாட்டின்படி அவர்கள் ஷஹாதத்தில் விரலை உயர்த்துவதில்லை. அவர்கள் தொழுது கொண்டிருப்பதையும் பொருட்படுத்தவில்லை. தொழுகையை முறிப்பதும் எத்தகைய குற்றம் என்றும் பார்க்கவில்லை. தொழுகையை விட்டு விட்டு அவரது விரலைப் பார்த்துக் கொண்டிருந்தனர். தொழுகையை முறித்து விட்டு இவரை ஏசத் தொடங்கினர்; அடிக்கத் தொடங்கினர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இந்தக் குழப்பங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வருவதற்கு முன்பு காணப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்து சீர்திருத்தம் செய்தார்கள். அடிப்பவர் தான் குழப்பவாதியாக இருக்கிறார். காயம் ஏற்படுத்துபவர் குழப்பவாதியா? அல்லது மருத்துவர் குழப்பவாதியா?'' இரு வகையினர் காயத்தை ஏற்படுத்துகின்றனர். ஒருவர் எவரையாவது அடித்து காயத்தை ஏற்படுத்துகின்றார். இன்னொருவர் மருத்துவர். இவரும் சிகிச்சை அளிக்கும் நோக்கில் காயத்தை ஏற்படுத்துகின்றார். ''ஒரு நபருக்கு காய்ச்சல் இருக்கின்றது. வாய் கசப்பாக இருக்கின்றது. டாக்டர் அவருக்கு கோனின் கொடுக்கின்றார். அநியாயக்காரரான அவர் வாய் கசக்கும்படி செய்து விட்டார் என்று எவரும் கூற முடியாது. மருத்துவர் சளியை வெளியே எடுக்கா விட்டால் உடல் நலம் கெட்டு விடும். சளியை வெளியேற்றுவதில் ஆட்சேபணை என்ன இருக்கிறது? சளியை வெளியேற்றுவதில் ஆட்சேபணை எப்படி செய்ய முடியும்? எலும்பு உடைந்து விடுகிறது. காயத்தை டின்க்சரால் சுத்தப்படுத்தவில்லை என்றால் மேலும் அதன் மீது எரிச்சலை ஏற்படுத்துகின்ற மருந்தை தடவாமல் விட்டால் நோயாளியின் நிலை எவ்வாறு முன்னேற்றமடைய முடியும்? அவரது உயிரே ஆபத்தில் முடியும்? இந்நிலையில் ஒருவர் ஒரு மருத்துவரை எவ்வாறு குற்றவாளியாக்க முடியும்?'' எனவே, மருத்துவர் ஒருவருக்கு கஷ்டம் தருகிறார் எனில் அது சிகிச்சை செய்யும் நோக்கில் தருகிறார்.

அன்னார் கூறுகின்றார்கள்: ''ஒரு மனிதர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இதே பிரிவினை குறித்த கேள்வி கேட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்து மேலும் பிரிவை ஏற்படுத்தி விட்டார். ஏற்கனவே இவ்வளவு குழப்பம் இருந்தது என்றார்.'' ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்கள் கூறினார்கள்: “நல்ல பாலை பாதுகாப்பதற்கு அதனை தனியாக வைப்பீர்களா? அல்லது தயிருடன் சேர்த்து வைப்பீர்களா? என முதலில் கூறுங்கள். பாலை பாதுகாப்பதாக இருந்தால் அதனை தயிரை விட்டு பிரித்து வைக்கின்றனர். ஏனெனில், ஏதாவது தயிரின் ஒரு துளி அதில் பட்டு விட்டால் பால் வீணாகி விடுகிறது. எனவே, இறை தூதரின் ஜமாஅத்தைப் பிரிந்து சீர்குலைந்து போனவர்களை விட்டும் பிரித்து வைப்பது அவசியமாக இருந்தது. இறை தூதர்களின் ஜமாஅத் நோயாளிகளை விட்டு தனித்திருக்கா விட்டால் அந்நோயால் பாதிக்கப்பட்டு விடுவர். இதுபோன்றே அல்லாஹ்வுடைய சுன்னத்தாவது ஆன்மீக நோயாளிகளை விட்டு தூய மக்களின் ஜமாஅத்தை பிரித்து வைக்க வேண்டியது இருந்தது. எனவே அல்லாஹ்வுடைய கட்டளையாவது, ஜனாஸா, திருமணம், தொழுகை போன்றவற்றில் அவர்கள் தனித்திருக்க வேண்டும் என்பதாகும்.”

பெண்களுக்கு போதனை செய்தவாறு கூறுகின்றார்கள்: ஏனெனில் பெண்களே பெரும்பாலும் மாறு செய்கிறார்கள். எனவே, நான் பெண்களுக்கு போதனை செய்கிறேன். நோயாளிகளுடன் இருக்கும் உடல்நலம் உள்ளவரின் வாழ்வும் ஆபத்திற்குள்ளாவது போன்று அஹ்மதி அல்லாதவர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலமும் அதே நிலைதான் ஏற்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சகோதர சகோதரிகளுக்கிடையில் உள்ள உறவை எவ்வாறு கை விடுவது? என்று பெரும்பாலான பெண்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: “நான் உண்மையாகவே கூறுகிறேன். ஒரு பூகம்பம் ஏற்பட்டாலோ நெருப்பு பற்றிக் கொண்டாலோ ஒரு சகோதரி சகோதரரை பொருட்படுத்துவதில்லை. அது மட்டுமின்றி அவரை தள்ளி விட்டு விழுந்து கொண்டிருக்கும் கூரையிலிருந்து தப்பிக்க வெளியில் ஓடி வர முயற்சி செய்வார்கள் எனில் பிறகு மார்க்க விஷயத்தில் மட்டும் ஏன் இவ்வாறு எண்ணம் கொள்ளப்படுகிறது? உண்மையில் இது சுகபோக உணர்வாகும்.” (துன்பத்தைப் புரிந்து கொண்டு விட்டால் ஏன் பிரிக்கப்படுகிறது? பிளவுபடுகிறது? என்ற சிந்தனையெல்லாம் வராது. துன்பங்களின் வேளையில் இது நடக்காது. இதனை புரியவில்லை எனில், மார்க்கத்தைப் பற்றி புரியவில்லை எனில் பிறகு இதுபோன்ற சுகபோக உணர்வுகள் சேர்ந்து கொள்கின்றன. துன்பத்தின் உணர்வு இருக்கும் எனில் துரிதமான எதிர்நடவடிக்கை இவ்வாறு இருக்காது.) “இறைவன் ஒருவரிடம் இரவில் உயிரைக் கைப்பற்றும் மலக்கை அனுப்பி உமது சகோதரரின் உயிரை எடுக்கவே எனக்கு கட்டளையிடப்பட்டது. சரி நல்லது. அவருக்குப் பதிலாக உனது உயிரை எடுத்துக் கொள்கிறேன் என்று கூறினால், எவரும் அதனை ஒப்புக் கொள்ளமாட்டார். எந்தப் பெண்ணும் அதனை ஒப்புக் கொள்ள மாட்டார்.

அல்லாஹ் கூறுகிறான்: يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا قُوْٓا اَنْفُسَكُمْ وَاَهْلِيْكُمْ نَارًا நம்பிக்கை கொண்டவர்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். **(66:7)** இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பின்பற்றுபவர் மற்ற அஹ்மதியல்லாதவர்களுடன் திருமணம் செய்தால் கணவரின் காரணத்தால் நிச்சயமாக அவர் அஹ்மதிய்யத்தை விட்டும் தூர விலகி விடுவார் அல்லது விரக்தியில் இறந்து விடுவார். விலகவில்லை எனில் பிறகு அத்தகைய வீடுகளில் அவர்கள் மீது கடுமை காட்டப்படும். மார்க்கக் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக உறவினர்களை விட்டு தனித்து விடப்படுவர். இக்காலத்திலும் இது நடைபெறுகிறது. ஆக, இது ஒரு நெருப்பாகும். ஒரு பெண் தனது கையால் தானே தனது மகளை நெருப்பில் போடுவாளா? இவ்வாறு ஒரு சிறு தொடர்பிற்காக அவளை நெருப்பில் இடப்படுகிறது. இதிலிருந்து தப்பிக்க வேண்டும்.” (மஸ்தூராத் ஸே ஹிதாப். அன்வாருல் உலூம் தொகுதி 11, பக்கம் 518-519)

ஆக, அன்னியர்களுடன் நாம் சம்பந்தம் செய்வதில்லை என்று பெரும் குற்றம் சாட்டப்படுகிறது. இது பிரிவினையல்ல. மாறாக, நம்மை நாமே காப்பாற்றுவதற்காக செய்யும் முயற்சியாகும். உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதற்கு செய்யும் முயற்சியாகும். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தரும் ஆன்மாவை புரிந்தவருக்கே இந்த சிந்தனை வர முடியும். இதில் ஆண்களும் அடங்குவர். அஹ்மதி இளைஞர்களும் அஹ்மதி பெண்களை தவிர்த்து அந்நியருடன் திருமணம் செய்கிறார்கள். இளைஞர்கள் புரிய வேண்டும். நீங்கள் உங்களை அஹ்மதி என்று கூற வைக்கின்றீர்கள். உண்மையான அஹ்மதி என்று கருதுகிறீர்கள். சொந்த விருப்பங்களைப் பார்க்காதீர்கள். திருமண வேளை வந்தால் அஹ்மதி அஹ்மதி பெண்களுடன் திருமணம் செய்யுங்கள். உங்கள் உலகியல் விருப்பத்தின் மீது, உங்கள் வருங்கால சந்ததிகள் மற்றும் மார்க்கத்திற்கு முன்னுரிமை தாருங்கள். அது அல்லாமல் பெண்கள் அந்நியருடன் செல்வதால் மட்டும் அழிவதில்லை. மாறாக, இளைஞர்களுக்கு வெளியிலிருந்து பெண் எடுப்பதாலும் அழிவே ஏற்படுகிறது. ஒவ்வோர் அஹ்மதியும் இதனைப் புரிய வேண்டும். அஹ்மதி, சமூக அழுத்தங்கள் மட்டும் உறவுகளால் மட்டும் அஹ்மதியாக இருக்கக் கூடாது. மாறாக, மார்க்கத்தைப் புரிந்து அஹ்மதியாவதற்கு முயற்சி செய்யுங்கள். அஹ்மதி இளைஞர்கள் வெளியே பெண் எடுத்தார்கள் என்றால், பிறகு அஹ்மதி பெண்கள் எங்கு திருமணம் செய்வார்கள்? எனவே, இளைஞர்களும் சிந்திக்க வேண்டும். இப்போதே இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கா விட்டால் இப்போதே இவ்வாறு சாயத் தொடங்கி விட்டார்கள் என்றால், பிறகு இந்த ஈர்ப்பு இன்னும் அதிகமாகி விடும். அவர்களின் அடுத்த தலைமுறையில் அல்லாஹ்வின் சிறப்பான அருள் இருப்பவர்கைளத் தவிர அவர்களிடம் அஹ்மதிய்யத் இருக்காது.

நான் பெரும்பாலும் வெளியில் சம்பந்தம் செய்கிற இளைஞர்களிடமும் கூறுகிறேன். பெண்களின் உரிமையை வழங்குங்கள். நீங்கள் வெளியில் சம்பந்தம் செய்தால், ஏதாவது ஒரு காரணத்தால் அல்லது நிர்பந்தத்தால் அவ்வாறு செய்தால் ஒரு இளைஞரை அஹ்மதிய்யத்தில் இணையுங்கள். அவரைக் காப்பாற்ற அஹ்மதியாக்குங்கள். பிறகு அவரை அஹ்மதி பெண்களுடன் திருமணம் செய்து வையுங்கள். இதனால் தப்லீக் மற்றும் தர்பிய்யத்தின் பக்கம் கவனம் ஏற்படும். இந்த உணர்வின் காரணமாக உங்களுக்கே அஹ்மதி பெண்களுடன் திருமணம் செய்வதற்கு கவனம் ஏற்படும். எவ்வாறிருப்பினும், பெண்களின் திருமண விவகாரம் இன்றல்ல; எப்போதும் இருக்கிறது.

இதுபற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் விவரித்தவாறு கூறுகின்றார்கள்: “ஒரு முக்கியமான விஷயத்தை நான் இன்று கூற விரும்புகிறேன். அது அஹ்மதி மற்றும் அஹ்மதி அல்லாதவருடன் திருமண தொடர்பான பிரச்சனையாகும். இதே விஷயத்தில் இதனைத் தொடர்ந்து *குஃபூ* (சமநிலை) தொடர்பான பிரச்சனைகள் ஏற்பட்டு அது பற்றிய கேள்வியும் எழுகின்றது. நமது ஜமாஅத் மக்களுக்கு திருமணம் சம்பந்தமாக பிரச்சனைகள் வருகின்றன. எனக்கு இதனைப் பற்றி முதலிலேயே தெரிந்து தான் இருந்தது என்றாலும் இந்த ஒன்பது மாத காலத்தில் அதிக அளவில் இதனால் தடைகளும் பிரச்சனைகளும் இருப்பது தெரிய வருகிறது.” இந்த ஒன்பது மாத காலம் என்பது அன்னார் கிலாஃபத் பொறுப்பேற்ற சுமார் ஒன்பது மாத காலம் கழிந்து ஆண்டு மாநாடு வந்தது.

**1914** –ல் அன்னார் சொற்பொழிவாற்றினார்கள். அவர்கள் கிலாஃபத் பொறுப்பை ஏற்ற பிறகு ஏறக்குறைய **9** மாதங்கள் கடந்த பிறகு ஆண்டு மாநாடு நடந்த போது அதில் அவர்கள் இவ்விஷயத்தைக் கூறினார்கள்: “மக்களது கடிதங்களிலிருந்து தெரிய வருவதாவது, நமது ஜமாஅத்திற்கு இந்த விஷயத்தில் கடும் துன்பம் உள்ளது. இன்றும் இதே நிலை தான் உள்ளது. இந்த கஷ்டம் தொடர்கிறது. பிரச்சனைகள் உள்ளன என்றாலும் நாம் அதனை தீர்க்கவும் வேண்டும்.”

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: “ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அஹ்மதி இளைஞர்கள், அஹ்மதி பெண்களின் பெயரை ஒரு பதிவேட்டில் எழுதப்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்கள். இந்தப் பதிவேட்டில் எழுதும் ஏற்பாடு எவரது தூண்டுதலினால் வந்ததோ அம்மனிதர், ஹுஸூர் திருமண விஷயத்தில் பெரும் சிக்கல் உள்ளது. மற்றவர்களுடன் திருமணத் தொடர்பு வைக்கக் கூடாது என்றும் நமது ஜமாஅத் தனித்து இருக்க வேண்டும் என்றும் கூறுகிறீர்கள். இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்? ஒரு பதிவேட்டை ஆயத்தம் செய்ய வேண்டும். அதில் திருமணம் ஆகாத இளைஞர்கள், பெண்களின் பெயர்கள் இருக்க வேண்டும். அதனால் திருமணம் செய்ய வைப்பது எளிதாக இருக்கும். ஹுஸூரிடம் எவராவது விண்ணப்பித்தால் அந்த பதிவேட்டைப் பார்த்து அவருக்கு திருமணம் செய்து வைக்கலாம். ஏனெனில் தங்களின் வார்த்தையை ஏற்றுக் கொள்ளாத எந்த அஹ்மதியும் இல்லை. இது அம்மனிதர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறியதாகும்.

சிலர் இடையில் தமது ஏதாவது ஒரு நோக்கத்தை வைத்தவாறு கருத்தை முன் வைக்கிறார்கள். இவர்கள் இறுதியில் சோதனையில் விழுகிறார்கள் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். சிலர் தமது பிரச்சனைகளை எடுத்து வைக்கிறார்கள். அதில் தமது சுயநலமும் இருக்கிறது. பிறகு இதனால் சோதனையிலும் விழுகிறார்கள். ஏனெனில் அந்த மனிதரின் நிய்யத்தே சரியாக இருந்ததில்லை என்று பின்னர் தெரிய வந்தது. அதே நாளில் ஒரு மனிதர் மிகவும் தூய கலப்பற்ற மனிதராக இருந்தார். அவருக்கு திருமணம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. திருமணத்திற்காக ஒரு பதிவேட்டை ஆயத்தம் செய்ய வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறக் காரணமாக இருந்த அம்மனிதருக்கு ஒரு பெண் இருந்தாள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த மனிதரது பெயரைச் சொல்லி அந்த இளைஞனை அவரது வீட்டிற்கு அனுப்பினார்கள். ஆனால் அம்மனிதரோ மிகவும் அறிவு ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு காரணத்தை சொல்லி பெண் தர மறுத்து விட்டார். பெண்ணை ஏதோ அஹ்மதியல்லாத ஒருவருக்கு திருமணம் செய்து தந்து விட்டார். ஹஸ்ரத் சாஹிபிற்கு இவ்விஷயம் தெரிய வந்ததும் நான் இனி திருமண விஷயத்தில் தலையிட மாட்டேன் என்று கூறினார்கள். இவ்வாறு அந்த தீர்மானம் அப்படியே நின்று விட்டது. ஆனால், அந்த விஷயம் தொடர்ந்து கடைபிடிக்கப்–பட்டிருந்தால் இப்போது ஏற்படுகிற கஷ்டம் ஏற்பட்டிருக்காது.” (பரகாத்தே கிலா∴பத். அன்வாருல் உலூம் தொகுதி 2, பக்கம் 209) சில நேரங்களில் நபியின் முன்னால் செய்யப்படுகிற மறுப்பு ஜமாஅத்திற்கு நிரந்தரமான சோதனையாக அமைந்து விடுகிறது.

அந்நியர்களுடன் திருமணம் செய்த சிறிது காலத்திற்குப் பிறகு சிலருக்கு தமது தவறு தெரிய வருகிறது. பெரும் பிரச்சனைகள் உருவாவது தெரிய வருகிறது. இப்போதும் சில பெண்கள் தாமே எழுதுகின்றார்கள் அல்லது பெண்களின் பெற்றோர் கூட நாங்கள் இந்த முடிவை எடுத்தோம். இப்போது அதனால் கஷ்டப்படுகிறோம் என்று எழுதுகிறார்கள். மார்க்கத்தை விட்டும் தூர விலகி விடுகிறார்கள். பிறகு பெண் வீட்டார் அப்பெண்ணை அவரது பெற்றோரை சந்திப்பதற்கும் உறவினர்களை சந்திப்பதற்கும் கூட கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். ஆனால் சில வேளை அவர்கள் பெருமையினால் நல்ல அஹ்மதி வரன்களை அவர்கள் மறுத்து விட்டனர். சில இடங்களில் இளைஞனும் திருப்தி கொள்கிறார். பெண்ணும் திருப்தி கொள்கிறார். இன்னும் சில இடங்களில் நான் திருமணம் செய்யுங்கள் என்கிறேன். ஆனால், அகந்தையால் மறுத்து விடுகிறார்கள். எவ்வாறிருப்பினும் அத்தகையோர் இருந்தனர். அவர்கள் ஹஸ்ரத்

மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஆலோசனையை மறுத்தார்கள் என்றால் எனது பேச்சை மறுப்பது ஒன்றும் பெரிய விஷயமல்ல. எனினும் அத்தகையோரின் முடிவும் பயங்கரமானதாகி விடுகிறது.

ஜெர்மனியில் அத்தகைய ஒரு சம்பவம் நடந்தது. பெற்றோர் மகளின் விருப்பத்திற்கேற்ப திருமணம் செய்யவில்லை அல்லது அவள் பிடிவாதமாக இருந்ததால் அவளை கொலை செய்து விட்டு இப்போது சிறையில் இருக்கிறார்கள். எனவே, அஹ்மதி இளைஞர்கள், பெண்கள் திருமணம் செய்ய விரும்பினால் பெற்றோர் பிடிவாதம் பிடிக்கக் கூடாது. குடும்பம் கோத்திரம் என்ற அகந்தையில் சிக்கிவிடக் கூடாது. திருமண சம்பந்தங்கள் தொடர்பாக ஒரு விஷயத்தில் தெளிவு பெற வேண்டும். பெண்களுக்கு விரும்பிய இடத்தில் திருமணம் செய்து வைக்க வேண்டும். அவர்களின் விருப்பத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள். திருமணத்தில் அவர்களின் விருப்பமும் அடங்கும்.

அவ்வாறிருந்தும், இஸ்லாம் இன்னொரு விஷயத்தையும் நிச்சயமாக பேணுமாறு கூறுகிறது. அதாவது, வலி –யின் விருப்பமின்றி நிகாஹ் அனுமதிக்கப்பட்டதல்ல. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினான். உண்மையில் அன்னார் அவனிடமிருந்து வந்தார்கள். நமது ஷரீஅத் இதனையே கூறுகிறது. அதாவது இஸ்லாமிய ஷரீஅத் இதனையே கூறுகிறது. வலி (பெண்களின் காப்பாளர்) –யின் அனுமதி இல்லாமல் சில விதிவிலக்குகளைத் தவிர – அந்த விதிவிலக்குகளையும் ஷரீஅத்தே வைத்துள்ளது. அதனை தவிர வலி –யின் அனுமதி இல்லாமல் எந்த திருமணமும் அனுமதிக்கப்படவில்லை. அவ்வாறு நடந்தால் அது அனுமதிக்கப்படாதது ஆகும். அத்தகையோருக்கு புரிய வைப்பது நமது கடமையாகும். அவர்கள் புரியவில்லை என்றால் அவர்களுடன் உள்ள தொடர்பைத் துண்டித்து விடுங்கள்.''

இத்தகைய சம்பவங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்திலும் நடந்துள்ளன. இந்த வகையில் ஒரு பெண் ஓர் இளைஞரை திருமணம் செய்ய விரும்பினாள். ஆனால் அவளது பெற்றோர் ஏற்றுக் கொள்ளவில்லை. இருவரும் காதியானுக்கு அருகிலுள்ள நங்கல் என்ற இடத்திற்குச் சென்று, அங்குள்ள ஒரு முல்லாவின் மூலம் திருமணம் செய்து கொண்டார்கள். அவர்கள் தமக்கு திருமணமாகி விட்டதாக கூறிக் கொள்ளத் தொடங்கினர். பிறகு அவர்கள் காதியானுக்கு வந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இது தெரிய வந்தது. அவ்விருவரையும் காதியானை விட்டு வெளியேற்றினார்கள். இது ஷரீஅத்திற்கு எதிரான செயலாகும். பெண்ணின் விருப்பத்தை மட்டும் பார்த்து வலி –யின் அனுமதியின்றி நிகாஹ் செய்வது – அங்கும் கூட பெண்ணுக்கு விருப்பம் இருந்தது. அந்த ஆணுடன் நான் திருமணம் செய்வேன் என்று அவள் கூறினாலும், வலி –யின் அனுமதி இல்லாமல் திருமணம் செய்து வைக்கப்பட்டது. எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவர்களை காதியானை விட்டு வெளியேற்றினார்கள். அதுபோன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் காலத்திலும் ஒரு நிகாஹ் நடந்தது. அந்த நிகாஹ்வும் அனுமதிக்கப்பட்ட –தல்ல என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நான் இளைஞனின் தாயாரிடம் கூறினேன். பாருங்கள்! உங்கள் இளைஞனுக்கு ஒரு பெண் வந்தது. பிறகு பெண்ணுக்கு சம்மதம் எனில் திருமணம் செய்வதில் என்ன தண்டனை வந்து விடப் போகிறது? என்று கேட்கிறீர்கள். உனது இளைஞனுக்கு பெண் கிடைப்பதால், பெண்ணுக்கு சம்மதம் எனில் வலி –யின் சம்மதத்திற்கு என்ன தேவை என்று கேட்கிறீர்கள். ஆனால் உங்களுக்கும் தான் பெண்கள் இருக்கிறார்கள். அவர்களை மணமுடித்துக் கொடுத்து விட்டீர்கள் என்றால், அவர்களுக்கும் பெண்கள் இருக்கலாம். இவ்வாறு அப்பெண்கள் உங்களிடமிருந்து வெளியேறி அந்நிய ஆணுடன் போய் விடுவதை நீங்கள் விரும்புவீர்களா? என்று கேட்டேன்.'' (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 18, பக்கம் 175-176) எனவே, முதலிலேயே கூறப்பட்டு விட்டது. பெற்றோரும் தேவையில்லாமல் கடுமை காட்டி சரியான எந்த காரணமும் இல்லாமல் பொய்யான தன்மானத்தின் பேரில் சம்பந்தம் செய்யக்கூடாது. மேலும், கொலை செய்யும் அளவுக்கு அநியாயமான காரியம் செய்வது சரியல்ல. அதே போன்று பெண்களுக்கும் அவர்கள் தாமே வீட்டிலிருந்து வெளியேறி நீதிமன்றத்திற்கோ அல்லது ஏதாவது மவ்லவியிடமோ சென்று திருமணம் செய்து கொள்வதற்கோ அல்லது நிகாஹ் ஓத வைப்பது போன்றவற்றிற்கோ இஸ்லாம் அனுமதி தரவில்லை.

சில கட்டாயமான சூழ்நிலைகளில் பெண்களும் கூட காலத்தின் கலீஃபாவிற்கு எழுதலாம். பிறகு சூழ்நிலைக்கேற்ப நல்ல தீர்மானம் எதுவோ அதனை அவர் எடுப்பார். எனவே, உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதைப் பெண்களும் இளைஞர்களும் முன்னிறுத்தினால் இறைவனும் அருள் செய்வான். ஒரு குத்பாவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்தக் கருத்தைக் கூறிக் கொண்டிருந்தார்கள். இறைவனை நினைவு கூறுதல் மற்றும் இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்துவதற்காக அவனுடன் தொடர்பு வைப்பதற்காக அவனது பண்புகளை முன்னிறுத்துவது அவசியமாகும். அந்தப் பண்புகளின் மூலம் தனிப்பட்ட தொடர்பை பிறகு அதிகரிக்க வேண்டும். அல்லாஹ்வின் அன்பின் சரியான புரிதிறன் அப்போது தான் ஏற்படும். பொதுவான இயற்கை சட்டத்திற்கேற்ப உலகில் வெளிப்படையான தொடர்பை ஏற்படுத்துவதற்கும் கூட இது அவசியமாகும். அதாவது, ஒன்று அன்பு கொள்ளப்படுபவரின் நெருக்கம் இருக்க வேண்டும். அல்லது குறைந்தபட்சம் அவரது உருவமாவது முன்னால் இருக்க வேண்டும். அதன் மூலமே விருப்பமும் தொடர்பும் வெளிப்படுகிறது.

இதனை விளக்கியவாறு கூறுகின்றார்கள்: ''அன்பு ஏற்படுவதற்கு ஒருவர் முன்னால் இருக்க வேண்டும் அல்லது அவரது உருவமாவது முன்னால் இருக்க வேண்டும் என்பது அவசியமாகும். உதாரணமாக, இஸ்லாம் இவ்வாறு கூறுகிறது. இது ஒரு புதிய விஷயமல்ல. திருமணம் செய்யும் போது நிழற்படத்தை அனுப்புமாறு கூறுவது பற்றி குறிப்பிடுகிறார்கள். நீங்கள் திருமணம் செய்வதாயின், உருவமைப்பை பார்த்துக் கொள்ளுங்கள். உருவமைப்பைப் பார்ப்பதும் கடினம் எனில் அக்காலத்தில் நிழற்படத்தைப் பார்க்க முடிந்தது. இப்போதும் பார்க்க முடியும்.''

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ''உதாரணமாக எனக்கு திருமணம் நடந்தது. எனக்கு சிறிய வயது தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் டாக்டர் ரஷீதுத்தீன் சாஹிபிற்கு பெண்ணின் நிழற்படத்தை அனுப்புங்கள் என்று எழுதினார்கள். அன்னார் நிழற்படத்தை அனுப்பினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த நிழற்படத்தை என்னிடம் தந்தார்கள். நான் பெண்ணை பிடித்திருக்கிறது என்று கூறினேன். உடனே அங்கு எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.''

எனவே, பார்க்காமல் அன்பு ஏற்படுவது எவ்வாறு? இதுபோன்ற விஷயம் எனில் இறைவன் உங்கள் முன்னால் வர வேண்டும். இப்போது இறைவன் அன்பு பற்றிய பேச்சு ஆரம்பமாகியது. இறைவன் உங்கள் முன் வந்தால் கண்களில் கையை வைத்து மூடி பிறகு இறைவன் மீது அன்பு ஏற்பட்டு விட்டது என்று கூறினால் பார்க்காமல் அன்பு எப்படி ஏற்படும்?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஒரு கவிதை வரி இதுவாகும்:

*பிரியத்திற்குரியவன் முன்னால் வராவிட்டாலும்*
*குரலையாவது கேட்க வேண்டும்.*
*இந்த அன்பனின் அழகின் அடையாளமாவது தென்பட வேண்டும்.*

இறைவனது நிழற்படம் என்றால் என்ன? அது அல்லாஹ்வின் பண்புகளாகும். அவன் ரப் என்ற அவனது பண்பாகும். அவன் *ரப், ரஹ்மான், ரஹீம், மாலிகி யவ்மித்தீன்* ஆக இருக்கிறான். *சத்தார்* ஆக இருக்கிறான். *குத்தூஸ்* ஆக இருக்கிறான். *முஃமீன்* ஆக இருக்கிறான். *முஹைமின்* ஆக இருக்கிறான். *ஸலாம்* ஆக இருக்கிறான். *ஜப்பார்* ஆக இருக்கிறான். *கஹ்ஹார்* ஆக இருக்கிறான். இன்னும் பிற இறை பண்புகள் வரைபடமாக இருக்கின்றது. சிறிது சிறிதாக இதனை மனதில் கொண்டு வரும் போது அதன் பொருளை உள்ளத்தில் அமர்த்திக் கொள்கின்றனர். நாம் தொடர்ச்சியாக இந்த பண்புகளை நமது எண்ணங்களில் கொண்டு வந்து அப்பண்புகளின் பொருளை மொழிபெயர்த்து நமது மனதில் பதிய வைத்துக் கொள்கின்றோம். பிறகு அவனது ஒரு பண்பு இறைவனது காதாகவும், ஒரு பண்பு கண்ணாகவும், ஒரு பண்பு கையாகவும், ஒரு பண்பு அவனது உடலாகவும் ஆகி அவையெல்லாம் சேர்ந்து இறைவனது முழு உருவம் மனதில் அமர்ந்து விடுகிறது.'' (அல் ஃபஸ்ல் 18 ஜூலை 1951, பக்கம் 5, தொகுதி 39/5, எண்.166) எனவே, அல்லாஹ்வின் மீது அன்பு கொள்வதற்கு இந்தப் பண்புகளை நிரந்தரமாக முன்னிறுத்துவது உண்மையான முறையில் இறைவனை நேசிப்பவராக்குகிறது. பிறகு மனிதனை இறைவனது நெருக்கத்தைப் பெறுபவனாக்கி விடுகிறது.

ஓர் உண்மையான முஃமின் மார்க்கத்திற்காக தன்மானத்தை வெளிப்படுத்த வேண்டும். இதனை விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

''ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நாவினால் நான் பலமுறை கேட்டுள்ளேன். நூற்றுக்கணக்கான சஹாபாக்கள் நம்மில் அதனை கேட்டவர்கள் உயிருடன் இருப்பார்கள். அன்னார் கூறினார்கள். சிலர் தமது இயல்பின் காரணமாக சரியான வழிமுறையை கடைபிடிக்க முடிவதில்லை. நல்ல நிய்யத்தும் நல்ல விருப்பமும் இருந்தால் கூட முடிவதில்லை. அன்னார் கூறினார்கள்: ஒரு மனிதர் இருந்தார். அவர் தனது நண்பரிடம், எனது பெண்ணுக்கு ஒரு வரன் தேடுங்கள் என்று கூறினார். சில நாட்களுக்குப் பிறகு அவரது நண்பர் வந்து, நான் ஒரு பொருத்தமான வரன் தேடி வந்துள்ளேன் என்று கூறினார். பையன் எப்படிப்பட்டவர் என்று கூறுங்கள் என்றார். அதற்கு அவர் பையன் நல்ல கண்ணியமான நல்ல மனிதர் என்றார். அதற்கு அம்மனிதர் பையனைப் பற்றி வேறு ஏதாவது நிலைமைகளைக் கூறுங்கள் என்றார். அதற்கு அவர், பையன் ரொம்ப ரொம்ப நல்லவர் என்றார். அவர் மீண்டும் வேறு ஏதாவது கூறுங்களேன் என்றார். (வெறும் நல்லவர் என்பது போதாது என்றார்.) அதற்குப் பதிலாக அவர் பல மடங்கு நல்லவர் என்றார். உடனே பெண்ணைப் பெற்றவர் நான் அவருக்கு பெண்ணை தர இயலாது. அவரை நல்லவர் என்று கூறுவதை தவிர வேறு இலக்கணம் எதுவும் இல்லை. அவருக்கு வேலை எதுவும் இல்லை. நாளைக்கு என் மகளை ஒருவர் தூக்கிக் கொண்டு போனால் கூட இவர் நல்ல மனிதராக மவுனமாக இருந்து விடுவார் என்று கூறினார்.''

''சிலர் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல மனிதர்களாக மட்டுமே இருக்கிறார்கள். அவர்களிடம் தன்மானமும் மார்க்க விஷயத்தில் வேகமும் இருப்பதில்லை.'' பெரிய கண்ணியவான்களான நல்லவர்களிடம் மார்க்க தன்மானம் இருப்பதில்லை. வேகமும் இருப்பதில்லை. ''நல்லெண்ணத்தின் காரணமாக அவர் முஃமின் என்று கண்டிப்பாக அழைக்கப்படுகிறார். ஆனால் அவரது 'நல்லவர்' என்ற பண்பு அவருக்கும் சரி ஜமாஅத்திற்கும் சரி தீமையாகவே

இருக்கிறது.'' (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 18, பக்கம் 206) எவ்வாறிருப்பினும், தன்மானம் இருக்க வேண்டும். சில வேளையில் ஜமாஅத் அமைப்பின் மீது ஆட்சேபனை செய்கின்றனர். இத்தகைய நல்ல மனிதர்கள் சில வேளைகளில் அத்தகைய சபைகளில் அமர்ந்திருக்கிறார்கள். தவறான செயலைச் செய்கின்றனர். வெறுமனே இந்த நல்லவராக இருப்பது ஒரு பொருட்டே அல்ல. நல்லவராக அப்படியே ஒரு சபையில் இருப்பது தன்மானமின்மையாக இருக்கிறது. குறைந்தபட்சம் இந்த அளவுக்காவது தன்மானம் இருக்க வேண்டும். எங்கு ஆட்சேபனை செய்யப்படுகிறதோ அந்த சபையில் இருந்து எழுந்து வந்து விட வேண்டும். அத்தகைய பேச்சைப் பேசுபவர் நிரந்தரமான குழப்பத்தைப் பரப்புபவராக இருப்பார் எனில் ஜமாஅத் அமைப்பிடம் கூற வேண்டும். ஜமாஅத் அமைப்பு காலத்தின் கலீஃபாவின் அறிவுக்கு அதைக் கொண்டு வர வேண்டும். அதன் மூலம் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்போது ஜமாஅத் அல்லாத ஒரு மவ்லவியின் சம்பவத்தைக் கூறுகிறேன். மக்கள் எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக வெறுப்பையும் காழ்ப்புணர்ச்சியையும் ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள்? எவ்வாறு பொய் கூறுகின்றனர்? இப்போதும் கூட பொய் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது இத்தகைய குற்றச்சாட்டுகளை அவர்கள் சுமத்தப்படுகின்றனரா? என்று கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையும் மக்கள் சூனியக்காரர் என்று கூறினர். எனக்கு நினைவில் உள்ளது. எனது ஒரு நண்பர் கூறினார். ஃபிரோஸ்பூர் பகுதியில் ஒரு மவ்லவி சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அஹ்மதிகளின் நூல்களை அறவே படிக்கக்கூடாது. காதியானுக்கும் ஒருபோதும் செல்லக் கூடாது என்றார். அவர் தனது கற்பனையில் தோன்றிய சம்பவத்தையும் மக்களுக்கு கூறத் தொடங்கினர். தனது பேச்சுக்கு வலுவூட்டுவதற்காக அந்த மவ்லவி தானே கற்பனை செய்து ஒரு சம்பவத்தை இவ்வாறு கூறினார்.

நான் ஒருமுறை காதியான் சென்றேன். என்னுடன் ஒரு பெரிய தலைவரும் இருந்தார். நாங்கள் இருவரும் காதியான் போய் விருந்தினர் இல்லத்தில் தங்கினோம். மிர்ஸா சாஹிபை சந்திக்க வேண்டும் என்று சொன்னோம். சிறிது நேரத்தில் மவ்லவி நூருத்தீன் சாஹிப் வந்தார். மிகவும் இனிமையாகப் பேசினார். அதற்கு சிறிது நேரத்திற்குப் பிறகு எங்களுக்காக ஒருவர் அல்வா கொண்டு வந்தார். இது உங்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டுள்ளதாகும் என்று மவ்லவி நூருத்தீன் சாஹிப் கூறினார். மவ்லவி சாஹிப் கூறினார்: எனக்கு தெரியும். இந்த அல்வாவில் சூனியம் செய்யப்பட்டுள்ளது. எனவே நான் அதில் கையைக்கூட வைக்கவில்லை. ஆனால் உடன் வந்தவருக்கு தெரியாது. அவர் அல்வாவை சாப்பிட்டு விட்டார். நான் ஏதோ சாக்குக் கூறி அங்கிருந்து நழுவி விட்டேன். நான் அல்வா சாப்பிடவில்லை என்பது மவ்லவி நூருத்தீனுக்கு தெரியாது. சிறிது நேரத்திற்குப் பிறகு அல்வாவை உண்டு விட்ட எனது நண்பர், எனது உள்ளத்தில் ஓர் ஈர்ப்பு ஏற்படுகிறது. நான் பைஅத் செய்ய விரும்புகிறேன் என்று கூறினார். அவருக்கு அல்வாவின் தாக்கம் ஏற்பட்டு விட்டது போலும்! நான் தான் சாப்பிட – வில்லையே! எனவே சுற்றுச்சூழலின் எந்த தாக்கமும் என் மீது ஏற்படவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு மிர்ஸா சாஹிப் தனது மூடிய வண்டியை ஆயத்தம் செய்தார். தானும் அமர்ந்து மவ்லவி நூருத்தீன் சாஹிபையும் உடன் அமர்த்தி, என்னையும் உடன் அமர்த்திக் கொண்டார். மவ்லவி சாஹிப், மேலும் பொய் கூறியவாறு கூறுகிறார்: மிர்ஸா சாஹிப் என்னிடம் பேச ஆரம்பித்தார். நானும் எல்லாவற்றையும் அனுபவப்படுவதற்காக தலையாட்டியவாறு ஆம் ஆம் என்று மட்டும் கூறி வந்தேன். நான் ஒப்புக் கொண்டு விடுவேன். ஏனென்றால், இவர் அல்வாவை சாப்பிட்டு விட்டதால் கண்டிப்பாக ஏற்றுக் கொண்டு விடுவார். ஏனெனில் அல்வா சூனியம் செய்யப்பட்டது என்று அவர் கருதினார்.

மவ்லவி சாஹப் கூறுகிறார்: மிர்ஸா சாஹிப் முதலில் நான் நபியாக இருக்கிறேன் என்று கூறினார். சிறிது நேரத்திற்குப் பிறகு நான் முஹம்மது (ஸல்) அவர்களை விட மேலானவன் (நவூதுபில்லாஹ்) என்று கூறினார். பிறகு, நான் இறைவன் என்றார். (நவூதுபில்லாஹ்) இதனைக் கேட்டு நான், அஸ்தக்ஃபிருல்லாஹ் இவை அனைத்தும் பொய்யாகும் என்று கூறினேன். உடனே மிர்ஸா சாஹிப் மவ்லவி நூருத்தீனிடம் வியப்புடன், இவருக்கு அல்வா கொடுத்தீர்களா? இல்லையா? (இவருக்கு சூனியம் ஏற்படவில்லையே?) என்று கேட்டேன். அதற்கு அவர்கள், சாப்பிடச் செய்தோம் தான். ஆனால் சூனியம் ஏற்படாதது ஆச்சரியம் தான் என்று கூறினர். (அல்லாஹ்வும் சரியான நேரத்தில் இவர்களின் பொய்யை வெளிப்படுத்தி விடுகிறான். இங்கும் அதுதான் நடந்தது.) மவ்லவி சாஹிப் பேசிய இதே சபையில் அஹ்மதி அல்லாத ஒரு வழக்கறிஞர் அமர்ந்திருந்தார். ஆனால், அவர் கண்ணியமான மனிதராக இருந்தார். ஏதோவொரு காலத்தில் சிகிச்சைக்காக முதல் கலீஃபாவிடம் வந்திருக்கிறார். சொற்பொழிவாற்றிய மவ்லவி சாஹிபின் பேச்சைக் கேட்டு எழுந்து, நான் மவ்லவிகளைக் குறித்து முதலிலேயே தவறான எண்ணம் கொண்டுள்ளேன். இவர்கள் மிகவும் பொய்யர்களாக இருக்கிறார்கள் என்று கருதினேன். இன்று இவர்களை விட அதிகமாக பொய் பேசுகின்ற வேறு எவரும் இருக்கவே முடியாது என்று விளங்கிக் கொண்டேன் என்றார்.

வழக்கறிஞர் சாஹிப் மேலும் கூறினார்: நான் அஹ்மதியில்லை என்று மக்களுக்கு தெரியும். ஆனால் சிகிச்சைக்காக காதியானுக்கு நானே நேரடியாக போய் வந்துள்ளேன். அங்கு தங்கியும் உள்ளேன். மவ்லவி கூறிய அனைத்து விஷயங்களும் தவறாகும். மூடிய வண்டி ஏது? அங்கு சாதாரண குதிரை வண்டி கூட கிடையாது. அக்காலத்தில் எளிய வண்டி இருந்தது. மவ்லவி கூறுகிற முடிய வண்டிகள் அங்கு காதியானில் இருந்ததில்லை. குதிரை வண்டியும் இருந்ததில்லை. பிறகு இறைவனது இன்னொரு வியத்தகு ஆற்றல் என்னவென்றால் இதனை முஸ்லிஹ் மவ்வூது விளக்குகிற காலம் வரையில் அந்த ஃபுட்டின் வண்டிகள் காதியானில் கிடையாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இங்கு சூனியம் இருக்கிறது என்று இப்போதும் அவர்கள் கருதுகிறார்கள். அதற்கு காரணம் என்னவெனில், இந்த ஜமாஅத்தில் இணைபவர்கள் அடி வாங்குகின்றனர். ஏச்சுப் பேச்சுக்கு உள்ளாகின்றனர். அவமானப்படுத்தப்படுகின்றனர். பொருளாதார சேதம் ஏற்படுத்தப்படுகிறது. பிறகும் கூட தம்மை இவ்வழியில் அவர்கள் அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். அஹ்மதிய்யத்தை விடுவதில்லை. இந்த அடி, உதை, ஏச்சுப் பேச்சுகள், சேதங்கள் முதலியவற்றால் இவர்கள் பயந்திருக்க வேண்டும். ஆனால் இவை அவர்களிடம் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.'' (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 23, பக்கம் 496-498) நிச்சயமாக சூனியம் செய்யப்பட்டதால் தான் தமது ஈமானில் இவர்கள் நிலைத்து நிற்கிறார்கள் என்று கருதுகின்றனர். அல்லாஹ் இந்த பொய்யான மவ்லவிகளிடம் இருந்து இந்த உம்மத்தைப் பாதுகாப்பானாக! மக்களுக்கு உண்மையைக் கண்டறிய வாய்ப்பு வழங்குவானாக! நமக்கும் நமது பொறுப்புகளை உணரும் வாய்ப்பினை வழங்குவானாக!

தொழுகைக்குப் பிறகு இரு ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன். ஒன்று, ஹாஸிர் ஜனாஸா இங்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அது கண்ணியத்திற்குரிய ஸகீனா நாயித் சாஹிபா உடையதாகும். இவர் ஜம்மு காஷ்மீரைச் சார்ந்த கண்ணியத்திற்குரிய முஹம்மது தீன் சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகள் ஆவார். கண்ணியத்திற்குரிய முஹம்மது ரஷீத் சாஹிபின் மனைவி ஆவார். ஏப்ரல் 3 ஆம் தேதி அன்று தமது 90 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூம் அவர்களின் குடும்பத்தில் ஜமாஅத் அவரது தந்தையாரின் மூலம் வந்தது. மர்ஹூமா காஷ்மீரின் எதிர்ப்புகளுக்கு இடையிலும் 16 –வது வயதில் பைஅத் செய்யும் வாய்ப்பு பெற்றிருந்தார். திருமணத்திற்குப் பிறகு பதான்கோட்டில் வாழ்ந்தார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் மற்றும் உம்முல் முஃமினின் டல்ஹௌசி செல்லும் போது இவர் அவர்களுக்கு விருந்தோம்பல் செய்யும் வாய்ப்பு பெற்றார். பாகிஸ்தான் உருவான பிறகு தனது கணவருடன் பதோமல்ஹி மாற்றல் ஆனார்கள். இங்கு பல வருடங்கள் சதர் லஜ்னாவாக இருக்கும் வாய்ப்பு பெற்றார்.

1974 –ல் எதிரிகள் இவரது வீட்டை கொள்ளை அடித்து எரித்து விட்டார்கள். இவர்கள் மிக தைரியத்துடன் அதன் சகித்துக் கொண்டு வாழ்ந்தார்கள். பிறகு இங்கு U.K. –விற்கு மாற்றல் ஆனார்கள். மிகவும் அன்புடன் குழந்தைகளுக்கு திருக்குர்ஆன் கற்றுத் தந்தார்கள். ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத்துடன் மிகவும் பற்று இருந்தது. நோயுற்றும், வயது முதிர்ந்தும் இருந்த நிலையிலும் அவ்வப்போது முறையாக என்னை சந்திக்க வருவார்கள். இவர் நல்லவரும், கலப்பற்றவரும், தஹஜ்ஜுத் தொழுபவரும், தொழுகை நோன்புகளைப் பேணுபவரும் கண்ணியமிக்கவரும் ஆவார். இவர் வஸிய்யத் செய்திருந்தார். இவரது பின்னால் மூன்று பெண்கள், மூன்று மகன்களை விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக!

இரண்டாவது ஜனாஸா கண்ணியத்திற்குரிய ஷவ்கத் கனி சாஹிப் ஷஹீது உடையதாகும். காஸி அப்துல் கனி சாஹிப் உடைய மகன் நதேரி ஆஸாத் கஷ்மீரைச் சார்ந்தவர். தற்போது ரப்வாவில் வாழ்ந்து வந்தார். பாகிஸ்தான் இராணுவத்தில் படை வீரராக குவாதர் பலூசிஸ்தானின் பஸ்னி என்ற பகுதியில் தீவிரவாதிகளுக்கு எதிரான Operation –ல் பங்கு பெற்றிருந்தார். அந்நிலையில் 3 ஏப்ரல் 2016 அன்று தீவிரவாதிகளில் திடீர் சுப்பாக்கிச்சூட்டால் தமது 21 –வது வயதில் நாட்டிற்காக தமது உயிரை ஈந்து ஷஹாதத்தின் பதவியைப் பெற்றார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அஹ்மதிகள் தேசத் துரோகிகள் என்று மவ்லவிகள் அபாண்டமாக பழிசுமத்துகிறார்கள். இப்போது ஷஹாதத்துகளாக தியாகம் செய்பவர்களாக அஹ்மதிகள் உள்ளனர். ஷஹீது மர்ஹூமின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் அவரது தந்தை வழி முப்பாட்டனார் கண்ணியத்திற்குரிய ரலி காஸி கைருத்தீன் சாஹிப் உடைய மகன் காஸி ஃபிரோஸுத்தீன் சாஹிப் மூலமாக உருவானது. இவர் கோயி என்ற ஆஸாத் கஷ்மீர் பகுதியிலிருந்து கண்ணியத்திற்குரிய மஹ்பூப் ஆலம் சாஹிபுடன் காதியான் சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அருளுக்குரிய கரங்களில் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தார். இவருடன் ஷஹீதின் தாய்வழி முப்பாட்டனார் பஹாதூர் வலி சாஹிப் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தார். ஃபெரோஸுத்தீன் சாஹிபுடைய குடும்பம் கோயி –யில் இமாம் மஸ்ஜிதை நடத்திக் கொண்டிருந்தார். அப்பகுதியில் குறிப்பிடத்தக்க மனிதராக இருந்தார். கண்ணியத்திற்குரிய ஃபெரோஸுத்தீன் சாஹிபின் பைஅத்திற்குப் பிறகு குடும்பத்தின் தரப்பபிலிருந்து அதிகமான எதிர்ப்பை சந்திக்க நேர்ந்தது. ஊர் நீக்கம், தள்ளி வைத்தல் ஆகியவற்றிற்கிடையில் அஹ்மதிய்யத்தில் நிலைத்திருந்தார். அல்லாஹ்வின் அருளால் மிகவும் கலப்பற்ற தூய குடும்பமாக இவரது குடும்பம் இருந்தது. காஸி ஃபெரோஸுத்தீன் சாஹிபிற்கு காசநோயின் தொந்தரவு இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் துஆவுக்கு விண்ணப்பித்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)*

# இங்கிலாந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பதிமூன்றாவது வருடாந்திர அமைதிக் கருத்தரங்கில் அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் அருளுக்குரிய பங்கேற்பு

## இஸ்லாத்தின் அழகான ஈடிணையற்ற போதனைக்கேற்ப உலகில் அமைதியை நிலைநாட்டுவது பற்றிய ஹுஸூர் அவர்களின் உள்ளத்திற்கு எழுச்சியூட்டும் சொற்பொழிவு. ஊடகங்கள் உலகிலுள்ள முஸ்லிம்கள் பெரும்பாலார் செயல்படுத்துகின்ற இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளையும் உலகின் முன்னால் எடுத்து வைக்க வேண்டும்.

### இந்நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு நாடுகளின் அமைச்சர்கள், பல்வேறு நாடுகளின் தூதுவர்கள், அரசு அதிகாரிகள், மேயர்கள் மற்றும் ஏனைய கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

*இலண்டன் 19 மார்ச் 2016*

*('அல் ஃபஸ்ல்' இன்டர்நேஷனலின் பிரதிநிதி - இலண்டன்)*

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு த்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 19 மார்ச் 2016 சனிக்கிழமை அன்று இலண்டன் மார்டனிலுள்ள பைதுல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் நடைபெற்ற இங்கிலாந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பதிமூன்றாவது அமைதிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு தலைமையுரை நிகழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியில் 36 நாடுதளைச் சார்ந்த 900 -ற்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் ஏறக்குறைய 500 பேர் அஹ்மதி அல்லாத மற்றும் முஸ்லிம்கள் அல்லாத விருந்தினர்கள் ஆவர்.

இந்த சந்தர்ப்பத்தில் ஹுஸூர் அவர்கள் மதிப்பிற்குரிய ஹதீல் காஸிம் சாஹிபா அவர்களுக்கு அமைதியை மேலோங்கச் செய்வதற்காக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பரிசை *(Ahmadiyya Mulsim Prize for the Advancment of Peace)* வழங்கினார்கள். இவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் காணப்படும் அவல நிலைமைகளின் காரணமாக இடம் பெயர்ந்து வந்துள்ள குழந்தைகளின் நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அசாதாரணமான தொண்டுகளைச் செய்துள்ளார்கள்.

அமைதிக்கான மாநாட்டில் ஹுஸூர் அவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: "உலகில் நிரந்தரமாக அமைதியை நிலைநாட்டுவதற்காக சமுதாயத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் சமமான அளவில் நீதியை நிலைநாட்ட வேண்டிய தேவை இருக்கின்றது. ஊடகங்கள் உலகில் நீதியை நிலைநாட்டுவதற்காக அதைப் பற்றிய சிறந்த வடிவத்தை மக்கள் முன் எடுத்து வைக்க வேண்டும். ஊடகங்கள் உலகம் முழுவதும் வாழ்கின்ற இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை செயல்படுத்துகின்ற மற்றும் சமுதாயத்தின் ஆரோக்கியமான பகுதியாகத் திகழ்கின்ற பெரும்பாலான முஸ்லிம்களின் கவரேஜை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். ஆனால், அதற்கு நேர் மாற்றமாக ஊடகங்கள் தவறான முறையில் இஸ்லாத்தின் பெயரால் மிருகத்தனமான முறையில் குற்றங்கள் புரிகின்ற விரல் விட்டு எண்ணக்கூடிய அந்த சில மக்கள் பற்றிய கவரேஜைத்தான் தருகின்றது என்பதை நம்மால் பார்க்க முடிகின்றது".

ஹுஸூர் அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்: "இஸ்லாத்தில் மார்க்கத்தை துறந்துவிட்டு செல்பவர்களுக்கு எந்தத் தண்டனயும் இல்லை. திருக்குர்ஆன் மார்க்க சுதந்திரத்தின் கொடியை உயர்த்திப் பிடிக்கின்றது. தீவிரவாதிகளுக்கு ஆயுதங்கள் விநியோகம் செய்கின்ற வழியைத் தடுத்து விட்டால் இவர்கள் மிக விரைவில் அழிந்து விடுவர்" என்ற ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியனில் பங்கு பெற்றிருக்க வேண்டும் என்று ஹுஸூர் அவர்கள் இந்த நிகழ்ச்சியையொட்டி தனியாக நடைபெற்ற ஒரு பத்திரிக்கையாளர்களின் மாநாட்டில் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: "இன்றைய காலகட்டத்தில் இஸ்லாத்தின் பெயரால் தீவிரவாத செயல்களில் ஈடுபடுகின்றார்கள். மக்களது உள்ளங்களில் இஸ்லாத்தை பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். ஆனால், இஸ்லாத்தை பார்த்து அச்சப்படவேண்டிய எந்த விஷயமும் அதில் இல்லை. இஸ்லாம் அமைதியின் மார்க்கமாகும். எவர்கள் அமைதி நிறைந்த இந்த மார்க்கத்தின் பெயரால் கொடூரமான குற்றங்களைச் செய்கின்றனரோ அவர்களுக்கு எந்நிலையிலும் இத்தகைய செயல்களைச் செய்வதற்கு இஸ்லாம் ஒருபோதும் அனுமதி தரவில்லை.

திருக்குர்ஆனின் முதல் அதிகாரத்திலேயே அல்லாஹ்வைப் பற்றி ரப்புல் ஆலமீன் அதாவது அனைத்து உலகங்களையும் படைத்து வளர்த்துக் காப்பவனாக அவன் இருக்கின்றான் என்று கூறப்பட்டிருக்கின்றது. அவ்வாறிருக்க அவன் எவ்வாறு தனது படைப்பினங்களைக் கொலை செய்வான்? அல்லது அவற்றிற்கு இழப்பை ஏற்படுத்த அவன் எவ்வாறு கட்டளையிட முடியும்? இஸ்லாம் ஒருவர் மற்றவருக்கிடையே பேச்சு வார்த்தை, ஒருவரையொருவர் புரிந்து கொள்வது ஆகியவற்றின் மூலமாக விவகாரங்களுக்கு தீர்வு காண்பதை விரும்புவதையே போதிக்கின்றது. ஆனால், எங்கு வேறு எந்த வழியும் இல்லையோ அங்கு அமைதியை நிலைநாட்டுவதற்காக வலிமையைப் பயன்படுத்துவதையும் அது தடுக்கவில்லை. இஸ்லாத்தின் தண்டனை வழங்குவது பற்றிய கருத்து பழிவாங்கும் விதத்தில் இல்லவே இல்லை. இதற்கு நேர்மாற்றமாக ஒரு குற்றத்திற்கு தண்டனை வழங்குவதன் நோக்கம் சமுதாயத்தின் சீர்திருத்தம் மற்றும் அது சிறந்து விளங்க வேண்டும் என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை."

ஹுஸூர் அவர்கள் இஸ்லாம் தொடர்பாக காணப்படுகின்ற ஒரு மிகப்பெரும் தவறான எண்ணத்தை அகற்றும் வகையில் இவ்வாறு கூறினார்கள்: "இஸ்லாத்தில் மார்க்கத்தைத் துறந்து சென்று விடுபவர்களுக்கு எந்தத் தண்டனையும் இல்லை. இதற்கு எதிரில் மார்க்க சுதந்திரத்தை நிலைநாட்டியவாறு அதை வளர்ச்சியடையச் செய்வது இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாக இருக்கின்றது. ஒரு முஸ்லிம் இஸ்லாத்தைக் கைவிட்டு விட விரும்பினால் இதற்கு அவருக்கு அனுமதி இருக்கின்றது. எந்தவொரு அரசுக்கும் பிரிவிற்கும் அல்லது தனி நபருக்கும் அவருக்கு எவ்விதத்திலும் தண்டனை வழங்குவதற்கு உரிமை இல்லை."

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: "ஊடகங்கள் சமுதாயத்தில் நல்ல விஷயங்கள் வளரும்படி செய்ய வேண்டும். இன்று ஊடகங்கள் ஓர் ஆற்றல்மிக்க கருவியாக இருக்கின்றது. அது சமுதாயத்தில் சிறந்த நிலையைக் கொண்டு வருவதற்காக தனது ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். உலகில் வாழ்கின்ற பெரும்பாலான முஸ்லிம்கள் அமைதியை விரும்புபவர்களாகவும் இஸ்லாத்தின் அமைதியை விரும்புகின்ற போதனைகளுக்கேற்ப செயல்படுபவர்களாகவும் இருக்கின்றனர். மேலும் இஸ்லாத்தின் பெயரால் தீவிரவாத செயல்களில் ஈடுபடுகின்ற விரல் விட்டு எண்ண முடிகின்ற ஒரு சில நபர்களின் செயலுக்கும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை ஊடகங்கள் உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும்."

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: "விளம்பரம், சில தீவிரவாத அமைப்புகள் எஞ்சியிருப்பதற்கு ஆக்ஸிஜனாகப் பயன்படுகின்றது."

தொடர்ந்து ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "மேற்கத்திய நாடுகள் சிரியாவின் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான வழிகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும். அதன் மூலம் சிரியாவிலுள்ள மக்களின் நிலைமைகள் சிறப்பானதாக ஆக முடியும். அரசாங்கங்களும் அமைப்புகளும் எந்தவொரு அரசையும் கவிழ்ப்பதற்குப் பதிலாக நிலையான அமைதியை நிலைநாட்டுவதை வலியுறுத்தி வந்தால் அதுவே சிறந்ததாகும். அவை லிபியா மற்றும் ஈராக்கிடமிருந்து படிப்பினையைப் பெற வேண்டும்."

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: "இதுவரை தீவிரவாத அமைப்புகளும் ஆயுதங்கள் விநியோகம் செய்யும் வழியைத் துண்டிக்க முடியவில்லை. தற்காலிகப் பலனைப் பெறுவதற்காக அவர்களுடன் ஆயுதங்கள் மற்றும் பெட்ரோல் ஆகியவற்றை வாங்குவதும் விற்பதும் தொடர்ந்து நடந்து வருகின்றது."

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: "எல்லா அரசாங்கங்களும் மனிதநேயத்தால் நிறைந்துள்ள உணர்வுகளை வளர்ப்பதற்கும் தத்தமது பொறுப்புகளைப் புரிவதற்கும் அதற்கேற்ப செயல்படுவதற்கும் நான் துஆ செய்கின்றேன். நீதியின் உறுதியான அடித்தளங்கள் மீது உலகில் நீதி நிலைநாட்டப்படுவதாகவும் நான் துஆ செய்கின்றேன்."

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் உரை நிகழ்த்துவதற்கு முன்னதாக இந்நிகழ்ச்சியில் சில கண்ணியத்திற்குரி விருந்தினர்கள் சொற்பொழிவாற்றினர். அவர்களில் இங்கிலாந்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் அமீரான மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மது ஹயாத் சாஹிப் அவர்கள் பாராளுமன்ற உறுப்பனரான Stobhain Monodagh அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரும் இலண்டன் மேயருக்காக வேட்பாளராக (2016) தேர்தலில் நிற்கின்ற Zac Goldsmith அவர்கள், தீவிரவாத செயல்களைத் தடுப்பதற்கான அமைச்சர் மாண்புமிகு லார்டு தாரிக் அஹ்மது B.T. சாஹிப் மற்றும் சர்வதேச முன்னேற்றத்திற்கான மாநிலச் செயலர் Justine Greeming ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

சொற்பொழிவாற்றிய கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் அனைவரும் உலகின் நிலைமைகள் மற்றும் அமைதியை நிலைநாட்டுவதன் முக்கியத்துவம் தொடர்பாக வலியுறுத்திக் கூறியவாறு இது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் செய்து வரும் முயற்சிகளைப் புகழ்ந்து பாராட்டினர். மேலும் நிலையான அமைதியை நிலைநாட்டுவதன் பக்கமும் அதனை வளர்ச்சியடையச் செய்வதன் பக்கமும் வலியுறுத்திப் பேசினர்.

*(அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 15 ஏப்ரல் 2016, பக்கம் 2)*

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 12 MAY 2016 Issue No. 10

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)*

பொய்யான மகிழ்ச்சியின் மூலம் தமது உள்ளங்களை மகிழ்வித்துக் கொண்டனர். பிறகு அந்த மகிழ்ச்சி காய்ந்து போன பிறகு, மேலும் இறைவன் நமது ஜமாஅத்தை எல்லா நாடுகளிலும் பரவச் செய்த பிறகு வேறொரு திட்டத்தைத் தேட ஆரம்பித்தனர்.

அப்போது இதே நாட்களில் எனது முன்னறிவிப்பிற்கேற்ப ஆரிய சமாஜைச் சார்ந்த பண்டிட் லேக்ராமை குறிப்பிட்ட காலத்திற்குள் எவரோ அழித்து விட்டார். ஆனால், இந்த முன்னறிவிப்பு நிறைவேறி இஸ்லாத்திற்குச் சாதகமான அடையாளம் வெளிப்பட்டது என்ற இந்த எண்ணம் எந்த மவ்லவிக்கும் வராமல் இருந்தது வேதனைக்குரிய விஷயமாகும். மாறாக, அவர்களில் சிலர், அரசாங்கம், முன்னறிவிப்பு செய்தவரை ஏன் பிடிக்கவில்லை? என்று கேட்டு மீண்டும் மீண்டும் அரசாங்கத்திற்கு கவனமூட்டினர். ஆனால், இந்த ஆசையும் நிறைவேறாமல் அவர்கள் அவமானத்தையும் தோல்வியையும் தழுவினர். மேலும் சில நாட்கள் கழிந்த பிறகு பாதிரி டாக்டர் மார்ட்டின் கிளார்க் அவர்கள் என் மீது ஒரு கொலை வழக்கைத் தொடர்ந்தார். பிறகு என்ன கூறுவது? அம்மக்களுக்கு இதனால் எந்த அளவு மகிழ்ச்சி ஏற்பட்டது என்றால் அதற்கு ஓர் அளவே இல்லாமல் இருந்தது. சிலர் பள்ளிவாயில்களில் ஸஜ்தா செய்தவாறு இந்த வழக்கில் எனக்கு தூக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்று வேண்டினர். இந்த ஆசை நிறைவேறுவதற்காக அவர்கள் எந்த அளவு அழுதழுது ஸஜ்தா செய்தனர் என்றால் இதனால் அவர்களது மூக்குகள் கூட தேய்ந்து விட்டன. ஆனால், இறுதியில் முன்னரே வெளியிடப்பட்டிருந்த இறைவனின் வாக்குறுதிக்கேற்ப மிகவும் கண்ணியத்துடன் குற்றமற்றவனாக நான் விடுவிக்கப்பட்டேன். நான் விரும்பினால் இதற்காக கிறிஸ்தவர்கள் மீது அபராத வழக்கு தொடர்வதற்கு எனக்கு அனுமதி வழங்கப்பட்டது. சுருக்கமாகக் கூறுவதென்றால் இந்த ஆசையும் கூட நிறைவேறாமல் எதிரி மவ்லவிகளும் அவர்களின் தாக்கத்தின் கீழ் இருப்பவர்களும் தோல்வி கண்டனர்.

சில நாட்கள் கழிந்த பிறகு கரம்தீன் என்ற பெயரிலுள்ள ஒரு மவ்லவி குர்தாஸ்பூரில் என் பெயரில் இராணுவ வழக்கைத் தொடர்ந்தார். என்னை எதிர்க்கின்ற மவ்லவிகள் அதற்கு ஆதரவாக கூடுதல் துணைக் கமிஷனர் ஆத்மாராம் அவர்களின் நீதிமன்றத்திற்குச் சென்று சாட்சி கூறினர். தங்கள் முழு வலிமையையும் இதற்காக அவர்கள் பயன்படுத்தினர். இந்த முறை அவர்கள் நிச்சயமாக வெற்றி பெறுவர் என்று அவர்கள் பெரிதும் நம்பினர். அவர்களுக்குப் பொய்யான மகிழ்ச்சியைத் தருவதற்காக ஆத்மாராம் இந்த வழக்கில் தனது புரியாமையின் காரணமாக முழுமையாக அதைப் பற்றி சிந்திக்கவில்லை. எனக்கு சிறைத் தண்டனை வழங்க அவர் ஆயத்தமாகி விட்டார். அப்போது, ஆத்மாராமின் பிள்ளைகளை மரணிக்கச் செய்வதன் மூலம் அவரை துக்கத்தில் ஆழ்த்தி விடுவான் என்பதை இறைவன் எனக்கு தெரிவித்தான். இந்த ஆன்மீகக் காட்சியைப் பற்றி நான் எனது ஜமாஅத்திற்கு தெரிவித்தேன். பிறகு நடந்தது என்னவென்றால், ஏறக்குறைய 20 அல்லது 25 நாட்களுக்குள் அவரது இரு மகன்கள் மரணித்து விட்டனர். இறுதியில் ஆத்மாராமால் எனக்கு சிறைத் தண்டனையை வழங்க முடியவில்லை. தீர்ப்பு எழுதும் போது அவர் என்னை கைது செய்வதற்கான அடித்தளத்தையும் அமைத்திருந்தார். ஆனால், இறுதியில் இறைவன் இந்தச் செயலைச் செய்வதிலிருந்து அவரை தடுத்து விட்டான். ஆனால், இந்த நிலையிலும் கூட அவர் எனக்கு எழுநூறு ரூபாய் அபராதம் விதித்தார். பிறகு டிவிஸனல் நீதிபதியின் நீதிமன்றத்திலிருந்து கண்ணியத்துடன் குற்றமற்றவனாக நான் விடுவிக்கப்பட்டேன். கரம்தீனுக்கு வழங்கப்பட்ட தண்டனை நிலுவையில் இருந்தது. எனக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகை திருப்பித் தரப்பட்டது. ஆனால், ஆத்மாராமின் இரு மகன்களும் திரும்பி வரவில்லை.

கரம்தீன் தொடர்பான வழக்கில் எந்த மகிழ்ச்சியைப் பெற வேண்டும் என்று நமது எதிரி மவ்லவிகளுக்கு ஆசை இருந்ததோ அது நிறைவேற முடியவில்லை. மவாஹிபுர் ரஹ்மான் என்ற நூலில் முன்னரே அச்சிட்டு வெளியாகி இருந்த இறைவனின் அந்த முன்னறிவிப்பிற்கேற்ப குற்றமற்றவனாக நான் விடுவிக்கப்பட்டேன். எனக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையும் திருப்பித் தரப்பட்டது. மேலும் இதற்காக நியமிக்கப்பட்ட நீதிபதியின் தீர்ப்பு ரத்து செய்யப்பட்டு சரியான தீர்ப்பை அவர் வழங்கவில்லை என்று அவருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், நான் மவாஹிபுர் ரஹ்மான் என்ற நூலில் வெளியிட்டிருந்தது போன்றே கரம்தீனுக்கு தண்டனை கிடைத்து விட்டது. நீதிமன்றத்தின் கருத்திற்கேற்ப அவர் பொய்யராக இருக்கின்றார் என்பதன் மீது சாட்சி முத்திரை பதிக்கப்பட்டு விட்டது. நமது எல்லா எதிரி மவ்லவிகளும் தமது நோக்கங்களில் தோல்வி அடைந்தனர். எனது எதிரிகள் இந்த அளவு தொடர்ச்சியாக தோல்வியுற்ற பிறகும் என்னைப் பற்றி ஏதாவதொரு நேரத்தில் இந்த நபருடன் அவருக்குப் பின்னால் ஒரு கை இருக்கின்றது. அது அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களில் இருந்து அவரை அது காப்பாற்றுகின்றது என்பதை அவர்கள் உணராமல் இருப்பது வேதனைக்குரியதாகும். துர்பாக்கியமாக இல்லாமல் இருந்தாலும் இது அவர்களுக்கு ஓர் அற்புதமாக இருந்தது. அதாவது, அவர்கள் தாக்குதல் நடத்திய ஒவ்வொரு நேரத்திலும் இறைவன் என்னை அவர்களின் தீங்கிலிருந்து காப்பாற்றினான். காப்பாற்றியதோடு மட்டுமல்லாமல் அவன் காப்பாற்றுவான் என்று முன்னதாகவே எனக்கு தெரிவித்து விட்டான். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு வழக்கிலும் நான் உன்னைக் காப்பாற்றுவேன் என்று இறைவன் எனக்கு தெரிவித்துக் கொண்டிருந்தான். எனவே, அவன் தனது வாக்குறுதிக்கேற்ப என்னைப் பாதுகாத்தான். இவை இறைவனின் வல்லமைமிக்க அடையாளங்களாகும். அதாவது, ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான்.

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)*

---

*(குத்பா தொடர்ச்சி...)*

அவர்கள் அவருக்கு அல்லாஹ் சுகத்தை வழங்குவான் என்று பதில் எழுதினார்கள். காசநோய் சரியாகி விட்டது. 80 வயதிற்கும் அதிகமான வயதைப் பெற்றிருந்தார்.

ஷஹீது மர்ஹூம் அவர்களுடைய தந்தையார் அப்துல் கனி சாஹிப் குடும்பத்துடன் பிப்ரவரி 2013 –ல் காஷ்மீரிலிருந்து மாற்றலாகி ரப்வா வந்து தங்கினார். ஷஹீது நதேரியில் பிறந்தார். ஆஸாத் காஷ்மீரில் 4 மே 1995 –ல் பிறந்தார். மெட்ரிக் வரை படித்தார். ஒன்றரை வருடம் முன்பு படை வீரராக சேர்ந்து இப்போது பயிற்சி முடிந்து Passing out pared என்ற தற்போது பலுசிஸ்தான் குவாதர் பகுதியில் தீவிரவாதிகளுக்கு எதிரான Operation –க்காக பணியில் நியமிக்கப்பட்டிருந்தார். ஏப்ரல் 2 மற்றும் 3 தேதிகளின் நடு இரவில் ஷஹாதத் சம்பவம் நடந்தது. ஷஹாதத்திற்குப் பிறகு மர்ஹூம் அவர்களின் சடலம் கராச்சி, லாஹூர் வழியாக ரப்வா கொண்டு வரப்பட்டது. இராணுவ மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஷஹீது மர்ஹூம் வஸிய்யத் செய்தவர். இது தவிர எண்ணற்ற சிறப்புகள் வாய்ந்தவர். இனிய சுபாவம், விருந்தோம்பல் செய்யும் பண்பு, இரக்க குணமுள்ளவராக இருந்தார். ஒவ்வொருவருக்கும் உதவி செய்யும் மனப்பான்மை உடையயவர். தொழுகையைப் பேணுபவராக இருந்தார். கிலாஃபத்துடன் ஆழ்ந்த பற்று இருந்தது. தொலை தூரப் பகுதிகளில் இருந்தாலும் நேரடியாக தொலைபேசி மூலம் குத்பா கேட்பவராக இருந்தார். ஷஹாதத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு எல்லா சந்தாக்களையும் கொடுத்து முடித்து விட்டார். இவரது குரல் நன்றாக இருந்தது. பணியின் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு பாடலை அழகிய ராகத்தில் அஹ்மதி அல்லாதவர் முன்பு பாடினார். அதிக அஹ்மதி அல்லாதவர் வந்திருந்தனர். பலர் பாராட்டினர். இத்தகைய அழகான பாட்டு யாருடையது? நாங்கள் இதற்கு முன் இதனை ஒருபோதும் கேட்டதில்லையே என்றனர். படைப்பினங்கள் மீது மிக்க அனுதாப உணர்வுள்ளவர்.

ஒருமுறை இவருக்கு பணியின் ஆரம்பத்தில் 4 மாத சம்பளம் மொத்தமாக கிடைத்தது. அப்போது ஒரு இராணு வீரர் ஷஹீதாகி இருந்தார். இவர் தனது எல்லா சம்பவத்தையும் ஷஹீதான தன்னுடன் இருந்த அந்த படை வீரரின் குடும்பத்திற்கு அன்பளிப்பாக வழங்கி விட்டார். அதே வேளையில் இவரோ இவரது குடும்பத்தின் ஒற்றைப் பராமரிப்பாளராக இருந்தார். ஷஹாதத்தின் இரவில் ஷஹீது மர்ஹூமின் தந்தை கனவு கண்டதாகக் கூறுகிறார்: ஷஹீது மர்ஹூமின் குடும்பத்திலுள்ள வஃபாத் ஆன பெரியவர்களுடன் இவர் அமர்ந்திருக்கிறார். இவரது முகத்தில் மிகவும் வெண்மையான ஒளி தெரிகிறது. அதனால் இவரது முகமே ஒளிமயமாகி விட்டது. மற்ற ஆட்களை விட அது மிகவும் பிரகாசமானதாக காணப்படுகிறது.

ரப்வாவில் இருக்கும் போது பல்வேறு பணிகளில் ரப்வாவிலும் இருந்துள்ளார். ஸயீமாகவும் உமூமியாகவும் பணி செய்துள்ளார். காதிம் மஸ்ஜித் ஆகவும் ஒரு மஸ்ஜிதில் சில காலம் இருந்துள்ளார். திருமணமாகவில்லை. இவரது நினைவாக தந்தையார் அப்துல் கனி சாஹிப் தாயார் குலாம் ஃபாத்திமா சாஹிபா, இரு சகோதரர்கள், இரு சகோதரிகள் இருக்கிறார்கள். அல்லாஹ் ஷஹீது மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக! உறவினர்களுக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! ஷஹீது மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். நான் ஏற்கனவே கூறியுள்ளேன்.

தொழுகைக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் இவ்விரண்டு ஜனாஸாக்களையும் தொழ வைப்பேன்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad